கண்ணன்

15-7-58

13 ந.பை

கண்ணன் தபால்கள்

கண்ணனை மும்முறையாவது வெளியிடுங்கள். அல்லது இன்னும் அதிகப் பக்கங்களுடன் 25 நயா பைசா வீதமாவது வெளியிடுங்கள். கடற்புலி மிகவும் நன்றாய் உள்ளது.

எஸ். பால கிருஷ்ணன், காவேப்பாக்கம்.

கன்றுக்குட்டி சிறந்த கற்பனைக் கதை. கண்ணன் குறித்த காலத்தில் எங்களூர் வராதது புரியாத புதிராக இருந்து வருகிறது.

—கே. ஏ. முகம்மது அலி, சிதம்பரம்.

எங்கும் ரிசல்ட், ஹாஸ்யக் கதம்பம் இரண்டும் ஜோர்.

—ஜி. ஜயபாண்டியன், மதுரை.

அரசனும் வீரனும் எழுதிய ஆர்வி அவர்கள் இவ்விதழில் ஏதாவது எழுதாதது ஏனோ? பேய் காத்த பேழை-2 எழுதிய ஜி. ஐ.வி. கதை அந்த ஏமாற்றத்தை ஓரளவு தவிர்த்தது. 'இப்படியும் உண்டா' வயறு புண்ணாகிவிட்டது, சிரித்துச் சிரித்து.

—ச. அ. கேசவன், கு. கழுகூலம்.

ஐயா, நீர் என்ன, எவ்வளவு சொல்லியும் கண்ணனை மும்முறையாகவோ வார இதழாகவோ மாற்ற மாட்டேன் என்கிறீரே—நானே சொன்னபடி செய்யும். —எஸ். ஜி. எஸ். எம்., திருத்தருப்பூண்டி.

கண்ணனை நாற்பது பக்கமாக, முழுநீளக் கதையோடு, குறித்த நாளில் எங்களூரில் கிடைக்கும்படி செய்யுங்கள்.

—ஆர். சண்முகக்கனி, பி. ராஜாமணி, திருப்பத்தூர்.

செகரடரி சந்துரு நன்றாக இருந்தது.

—ச. பழனியப்பன், மே. சிவ.

ஆசிரியர் அறிமுகம் வரவேற்கத் தக்கது, தொடர்கதைகளுக்கு அட்டைப்படம் வெளியிடுங்கள். —ப. காஜாமைதீன், கோட்டை.

'நீங்களும் நானும்' அதிகமாக வெளியிடுங்கள்.

—இ. சுப்பையா, பரமக்குடி.

சப்பாத்திப் புதர்கள் உண்டான விதத்தைச் சித்திரிக்கும் கதை நல்ல கற்பனை. —எஸ். சுசி, சென்னை-

கே. கண்ணுசாமி அவர்கள் எழுதிய அண்ணனும் தங்கையும் எப்போது வெளிவரும் என்று ஆவலோடு காத்திருக்கிறேன்.

ஏ. பவர்லால், ஆண்டர்சன் பேட்டை

எங்கள் வீட்டு வேலைக்காரி ஒரு ஹாஸ்யச் சித்திரம்.

—இ. எஸ். மணி, காஞ்சீபுரம்

நீங்கள் ஏன் சித்திரம் வரைபவர்களை அறிமுகப்படுத்தவில்லை?

—வி. சந்தர், காந்திநகர்

ஆர்விதான் ஜனா என்பதை நாங்கள் அறிவோம். கல்கண்டு அறிமுகப் பகுதியில் இது வெளியாகியிருக்கிறது.

—கலைச் செல்வன், திருமங்கலம்.

இவ்வாரம் தே. பார்த்தசாரதி அறிமுகம் ஆகியுள்ளார். அடுத்தபடி துரை முருகேசன் அறிமுகத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

—துரை முருகேசன், காரமடை.

ஜனாவின் முகவரி தேவை? —தமிழ்தாசன் திருச்சி-1.

காளிகோட்டையும் கறுப்புக் கண்ணாடியும் இரு கண்கள்.

—கே. எஸ். ஆர். பெருவெம்பு.

கண்ணன் எங்கள் வாழ்க்கையோடு இவ்வளவு தூரம் ஒன்றிவிடக் காரணமான தங்களுக்கு என் நன்றி. —எஸ். விசுவநாதன், சேலம்-1

15—7—1958

குழந்தைகளே!

இன்னும் பதினைந்து நாட்கள் தான் இருக்கின்றன! இனி முடிவுத் தேதியைத் தள்ளிப் போடப்போவதில்லை. ஆகவே, எழுத வேண்டும், எழுதவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்கள் எல்லாரும் உடனே எழுதி, அனுப்பி விடவேண்டும். ஆம்; போட்டியில் கலந்துகொள்ள எண்ணியிருப்பவர்களைத்தான் குறிப்பிடுகிறேன். ஒரு போட்டிக்கு மட்டும் எழுதிவிட்டு, மற்றப் போட்டிகளுக்கு எழுதாமல் சிலர் இருந்திருக்கலாம். அவர்களுக்குக் கூட இப்போது நல்ல வாய்ப்பு இருக்கிறது.

தொடர்கதைப் போட்டியை இந்த முறை இரண்டு மாதம் தள்ளிப் போட்டிருக்கிறோம். அக்டோபர் மாதம் இந்தப் போட்டியைப் பற்றி அறிவிப்போம். பரிசு பெறுகிற தொடர்கதையைப் புதிய ஆண்டில் வெளியிட அப்போது வசதியாக இருக்கும்.

தபால் பகுதியில் வாசகர்களுடைய கருத்துக்களை வெளியிட்டு வருகிறோம். உங்கள் அபிப்பிராயங்களை அந்தப் பகுதியில் ஒளிவு மறைவு இன்றி வெளியிடலாம்.

கண்ணனில் வெளிவரும் தொடர்கதைகள் விறுவிறுப்பாகச் செல்கின்றன என்று பலரும் எழுதி வருகிறார்கள். இனிமேல்தான் மேலும் விறுவிறுப்பு இருக்கிறது என்பதை அறிவிக்க விரும்புகிறேன் நான். கடற்புலி அடுத்த இதழில் முடிவுறுகிறது. ஆகஸ்டு 15-ஆம் தேதி சுதந்தர இதழில் முழு நீளக் கதை ஒன்று வெளிவருகிறது.

—ஆசிரியர்.

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.



பூவண்ணன்

பள்ளியில் மாணவராக இருக்கும்போதே நல்ல நல்ல கதைகளும், நல்ல நல்ல கவிதைகளும் எழுதிப் புகழ் பெற்றவர் அன்பர் பூவண்ணன். இவருடைய இயற்பெயர் வே. தா. கோபாலகிருஷ்ணன், எம். ஏ. பட்டம் பெற்றவர். இப்பொழுது கல்லூரி மாணவர்களுக்கெல்லாம் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகிறார். குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர். மேற்படி சங்கம் நடத்திய நாடகப் போட்டியிலும் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய ஒரங்க நாடகப் போட்டியிலும் பரிசு பெற்றிருக்கிறார் இவர். பத்துக்கு மேற்பட்ட புத்தகங்களை எழுதியிருக்கிறார். குழந்தைப் பத்திரிகை ஒன்றுக்குச் சில காலம் ஆசிரியராகவும் இருந்து அநுபவம் பெற்றிருக்கிறார். குழந்தைகளின் பண்பை வளர்க்கும் நல்ல கருத்துள்ள கதைகளும் கவிதைகளும் எழுதிக் குவிக்க வேண்டும் என்ற துடிப்புமிக்க பூவண்ணன், எப்பொழுதும் அடக்கமாகத்தான் இருப்பார். இவர் நட்புக்கு இனியவர்; நல்லவர்; நல்ல திறமைகளும் கை வரப் பெற்றவர். குழந்தைகளுக்கு நல்ல வழி காட்டுவதைப்போல, கல்லூரி மாணவர்களுக்கு அறிவோடு அன்பும் கலந்து புகட்டுகிறார் எல்லாம்,

கவர்னர் ஸ்ரீ பிரகாசா

கவர்னர் ஸ்ரீ பிரகாசாவின் முகம் நமக்கு நன்கு அறிமுகமானது, சென்னையில் 1952 முதல் கவர்னராக இருந்து, நம்முடைய அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமாக விளங்கியவர் இவர். இப்பொழுது பம்பாய் கவர்னராக இவர் இருந்து வருவதையும் நாம் அறிவோம்.

ஸ்ரீ பகவான்தாஸ் என்ற பெரிய வேதாந்தியின் திருக்குமாரர் இவர். இவர்களுடைய முன்னோர்கள் கிழக்கிந்தியா கம்பெனியாருக்கு லேவாதேவி செய்து வந்தவர்கள்.

பாரத நாட்டின் புண்ணிய க்ஷேத்திரமான காசிதான் இவருடைய சொந்த ஊர். அங்கேதான் 1890-இல் இவர் பிறந்தார். இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பரீக்ஷை தேறியவர். அநசூயாதேவி என்பது இவருடைய மனைவியாரின் பெயர்.

வெகுகாலமாகவே கவர்னர் ஸ்ரீபிரகாசா பிரம்மஞான சபையின் அங்கத்தினர். இதன் கிளை ஒன்றை இவர் 1912-இலேயே இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜில் தொடங்கினார். இவர் தொடர்புகொள்ளாத பெரிய ஸ்தாபனங்களே உத்திரப் பிரதேசத்தில் இல்லை என்று சொல்லிவிடலாம். 1918 முதலே இவர் அகில இந்திய காங்கிரஸின் அங்கத்தினராக இருந்து தேசிய விடுதலைப் போர்களில் பெரும் பங்கு எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார். நான்கு முறை சிறை சென்றிருக்கிறார். பாகிஸ்தானின் முதல் இந்திய ஹைகமிஷனராக இவரைத்தான் நியமித்தார்கள்.

ஸ்ரீபிரகாசா பத்திரிகைகளிலும் தொடர்பு உள்ளவர். நல்ல எழுத்தாளர். ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் பல நூல்கள் எழுதியிருக்கிறார். வடமொழியில் சிறந்த ஞானமும் ஹிந்தியில் புலமையும் உள்ளவர்.

மத்திய அரசாங்க மந்திரியாகவும், மற்றும் பல பொது ஸ்தாபனங்களின் தலைவராகவும், மும்முறை கவர்னராகவும் பணியாற்றி அநுபவமுள்ள ஸ்ரீபிரகாசா மிகவும் எளிய குணம் படைத்த சிறந்த மனிதர். நகைச்சுவை ததும்பப் பேசுபவர். கண்ணனில் இவர் தம்முடைய பாலியப் பருவத்து நிகழ்ச்சி ஒன்றை நகைச்சுவை ததும்ப எழுதியிருந்ததுதான் நமக்குத் தெரியுமே!

பார்த்துப் போ, தம்பி!

அழ. வள்ளியப்பா

பார்த்துப் போதம்பி - நன்றாய்ப்
பார்த்துப் போதம்பி;
பள்ளிக்கூடம் செல்லும்போது
பார்த்துப் போதம்பி.

மோட்டார் வரும், ஜட்கா வரும்,
மூர்க்க மாக லாரி வரும்;
ஆட்டோ ரிக்ஷா 'படப'டென்று
அலறிக் கொண்டே ஓடி வரும். (பார்த்துப்)

தெருவில் குறுக்கும் நெடுக்கு மாகச்
செல்லல் நல்ல தல்ல தம்பி;
விரைந்து ஓடும் வண்டி யாலே
விபத்து நேரக் கூடும் தம்பி. (பார்த்துப்)

சாலை நடுவில் நின்று பேசல்
தப்புத் தப்புத் தப்புத் தம்பி;
நாலு பேராய்க் கையைக் கோத்து
நடந்து போக வேண்டாம் தம்பி. (பார்த்துப்)

பாதித் தூரம் வலது பக்கம்
பார்த்துத் தெருவைக் கடப்பாய் தம்பி;
மீதித் தூரம் இடது பக்கம்
மேலும் பார்த்துச் செல்வாய் தம்பி. (பார்த்துப்)

சாலை ஓரம் நடந்து சென்றால்
சங்க டங்கள் இல்லை தம்பி;
காலை, மாலை கூட்டம் அதிகம்
கவன மாகச் செல்வாய் தம்பி. (பார்த்துப்)

டேய்! கொட்டாப்புளிதடியா அவனை ஏண்டா அழவிடறே?
நான் என்ன பண்ணறது தாத்தா? அவனுக்கு உங்க மாதிரி தொந்தி வேணுமீனு அழறான்!
உடம்பை வளைச்சி நல்லா தேகப்பயிற்சி பண்ணினா தொந்தி கரையும்னு இந்தப் புஸ்தகத்தில் போட்டிருக்கு. நீங்க செஞ்சா என்ன மாமா?
என்ன ஸார் வேணும்? உப்புக் கொழக்கட்டையா? இனிப்புக் கொழக்கட்டைய? அல்லது மோதகமா?!
!?
தொந்திக் கதம்பம்!
ஸார் இந்த ஒரு சாண் வயித்துக்கு மாத்திரம் ஏதாவது தருமம் பண்ணுங்க!!!
டேய்! பிள்ளையார் கோவில்லே ஏகக் கூட்டமாயிருக்கே! பிரார்த்தனை செலுத்த முடியாதே?
அதனாலே என்னடா! நம்ம தாத்தாகிட்டே செலுத்தி விட்டா போறது!
?

‘ஜனா’

19. செங்கணன் யார்?

கிட்டத்தட்ட இருபது ஆண்டுகள் இருக்கும்.—

அப்போது செங்கணன் தாய்க்கு மணப் பருவம். காடுகளிலும் காட்டை யடுத்த ஊர்களிலும் கொடிய பஞ்சம் ஒன்று தலை விரித்து ஆடியது.

உணவுத் தானியமின்றி மக்கள் தவித்தார்கள். கிராம மக்கள் சேகரித்து வைத்திருந்த தானியங்களைச் சிறுகச் சிறுகக் கரைத்து வந்தார்கள். ஆனால் காட்டில் வாழ்ந்த வேடுவர்களோ வேட்டையின்றி, உணவுக்கு வழியின்றித் தவித்தார்கள்.

அதனால் அவர்கள் அக்கம் பக்கத்திலுள்ள ஊர்களில் நுழைந்து, கொள்ளையிடத் துணிந்தார்கள். காட்டிலுள்ள கொடிய வன விலங்குகளைப் பக்கத்து ஊர்களுக்குள் துரத்தி விட்டுவிடுவார்கள். அவற்றைக் கண்டு ஊர் மக்கள் தங்கள் உயிருக்குப் பயந்து, உடமைகளை அப்படி அப்படியே போட்டு விட்டு, ஓடத் தொடங்கினார்கள். அவர்கள் போனதை யறிந்த வேடுவர்கள், ஊர்களிலே நுழைந்து, தானியங்களையும் பிற பொருள்களையும் அபகரித்துச் சென்று வந்தார்கள்.

அடிக்கடி இவ்வாறு அல்லலுற்ற கிராம மக்கள், தங்கள் அரசன் நலங்கிள்ளியிடம் சென்று முறையிட்டார்கள். ஆனால் அரசனால் அப்போது அவர்களுக்கு உதவி புரிய முடியவில்லை. பாண்டியர்கள் ஒருபுறம் அவனுக்குத் தொல்லை கொடுத்து வந்தார்கள். காளிகோட்டை பெரிய வேங்கையார் மட்டும் பாண்டியர்களைத் தடுத்து நிறுத்தாவிட்டால், அவனுடைய அரசே ஆட்டம் கண்டிருக்கும். மறுபுறம் உறையூரின் மற்றொரு சோழ வம்சத்து அரசன் அவனிடம் பகைமை கொண்டு போரிட்டு வந்தான். ஆகவே, அவன் என்ன செய்வதென்று புரியாமல் திகைத்தான்.

இந்தச் சமயத்தில் கடற்கரை ஓரமான பகுதிகளில் பெருநாகன் என்ற நாகர்கள் குடித் தலைவன் ஒருவன் இருந்தான். அவனும் நலங்கிள்ளியும் நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள். துரதிருஷ்டவசமாக, பெருநாகன் உடல் நலமின்றி, நோயுற்றுக் கிடந்தான். அதனால் நலங்கிள்ளியின் கையே ஒடிந்தது போலிருந்தது. இப்படித் திகைத்த சமயத்தில் நலங்கிள்ளிக்கு ஒரு நல்ல செய்தி வந்தது. பெருநாகனுடைய மகன் இளநாகன் தந்தைக்குப் பதிலாக உதவி செய்ய முன்வந்தான்.

இளநாகனுக்கு இருபது வயதுதான் இருக்கும். கட்டிளங்காளையைப்போல அவன் விளங்கினான். மனவலியும் புயவலியும் மிக்கவனாக அவன் காணப்பட்டான். நலங்கிள்ளிக்கு அவனைப் பார்த்ததுமே ஒரு பிரியம் உண்டாகிவிட்டது. கிட்டத்தட்ட தன் வயதை ஒத்த இளநாகனிடம் அவனுக்கு நட்பும் நம்பிக்கையும் ஏற்பட்டுவிட்டன.

வேட்டுவர்களின் தொல்லையை அடக்குவதற்காக அவனை நலங்கிள்ளி அனுப்பி வைத்தான். இளநாகனுடைய நாகர் படையினர், வேட்டுவர்களின் கொட்டத்தை ஓங்கவிடாமல் தடுத்ததோடு, வேட்டுவர்களைத் தனித்தனியே சிறைப்பிடித்து, அடிமைகளைப்போல வேலை வாங்கிவந்தார்கள். இதை யறிந்த வேட்டுவர்கள் சீற்றம் கொண்டார்கள். இளநாகனை எப்படியாவது கொன்றுவிட அவர்கள் முடிவு செய்துகொண்டார்கள். அவனை நேரிட எதிர்க்க அவர்கள் துணியவில்லை. வஞ்சகமாக அவனை வலைவீசிப் பிடித்துவிட அவர்கள் வழி வகுத்தார்கள்.

வேட்டுவர்களின் தலைவனுக்கு ஒரே மகள். அவள் தந்தையைப்போலவே அஞ்சா நெஞ்சமும் துணிவும் மிக்கவள். அவளைக் கொண்டு இளநாகனைப் பிடிக்க அவர்கள் ஒரு திட்டம் வகுத்தார்கள்.

அதன்படி அந்த வேட்டுவப் பெண் நக்கண்ணை, இளநாகனைத் தனியே சந்திக்க நேர்ந்தது. அவர்கள் எந்த நேரத்தில் ஒருவரை ஒருவர் பார்த்தார்களோ, தெரியவில்லை. அவள், வேட்டுவர்களின் வஞ்சகத் திட்டத்தை மறந்தாள். இளநாகன், சோழன் தன்னை அனுப்பிய காரியத்தை மறந்தான். வேட்டுவப் பெண்ணான நக்கண்ணைக்கு நாகர் தலைவனான இளநாகன்மீது அன்பு உண்டாகிவிட்டது. அதனால் வேட்டுவர்களின் வஞ்சகச் சூழ்ச்சி பலிக்கவில்லை. வேட்டுவர்கள் அவன் வழிக்கு விரைவிலேயே இணங்கி வந்துவிட்டார்கள். இளநாகன், திரும்பிய போது, தன்னோடு அந்த இளமங்கையையும் அழைத்துச் சென்றுவிட்டான்.

நக்கண்ணை இளநாகனைக் கணவனாக வரித்துவிட்டாள். ஆனால் ஊர் சென்றதும், இளநாகனுக்கு அங்கே இன்னொரு மனைவி இருப்பது தெரிந்தது. அவள் இளநாகனுக்கு முறைப் பெண். இருந்தாலும் இளநாகன், நக்கண்ணைமீதே அதிக அன்பு கொண்டிருந்தான். மூத்தவளை அவன் அதிகமாக விரும்பவே இல்லை. அவள் முறைப் பெண்ணானதால் அவளுக்கு அந்த நாகர்களிடையே அதிகச் செல்வாக்கு இருந்தது. அவள் நக்-

கண்ணையை வேம்பென வெறுத்தாள்; இளநாகனுடைய அன்பைக் கவர்ந்தவள் என்று அவளைத் தன் எதிரியாகப் பகைத்தாள். முடிந்தபோதெல்லாம் அவளுக்குக் கொடுமைகள் இழைத்தாள். இதையெல்லாம் இளநாகன் ஒருவாறு அறிந்திருந்தான். அப்படி இருந்தும் அவனால் அவளை அடக்க முடியவில்லை. வேட்டுவர்கள் கொட்டத்தை யடக்கிய அந்த ஏறு, மூத்தாளின் கொடுமையை அடக்க வழி தெரியாமல் கலங்கினான்.

இது நாளுக்கு நாள் இன்னும் அதிகமாகியது. நக்கண்ணை இவ்வளவையும் இளநாகனை முன்னிட்டுப் பொறுத்துக்கொண்டாள். இந்த நிலையில் அவள் வயிற்றிலே கருவுண்டாயிற்று. அதிலிருந்து மூத்தாளின் கொடுமையும் தாங்க முடியாததாயிற்று. இளநாகனுக்கு எதிரே அவள் நக்கண்ணையை நேசிப்பதுபோல நடிப்பதும், அவன் இல்லாதபோது வேங்கையைப் போலச் சீறுவதுமாக நாட்கள் சென்றன. இளநாகனுடைய அன்பை இழக்காதிருப்பதற்காக அவள் தானும் சூலுற்று இருப்பதாகச் சொல்லிக்கொண்டாள்.

நக்கண்ணை நிறைசூலியாக இருந்த சமயம், இளநாகன் சோழ அரசனின் வெற்றி விழாவில் கலந்துகொள்ள வேண்டியிருந்தது. நக்கண்ணைக்குத் தனியே மூத்தவளோடு இருக்கப் பயமாக இருந்தது. மூத்தாள் சூலுற்று இருப்பதாகச் சொல்வதெல்லாம் வெறும் பொய் என்பதை நக்கண்ணை அறிவாள். ஆகவே அவள் தனக்கு இன்னல் ஏதாவது புரியக்கூடும் என்று அஞ்சி, தானும் இளநாகனோடு வருவதாகக் கூறினாள்.

இளநாகன் அந்த நிலையில் அவளை அழைத்துப்போக முடியுமா? அதனால் அவளுக்கு ஆறுதல் பல கூறி, அவசியமானால் தனக்கு ஆள் அனுப்பும்படி ஏற்பாடு செய்துவிட்டு, ஆவூருக்குச் சென்றான். போனவன் அங்கேயே சோழ அரசனுடைய வற்புறுத்தலுக்கு இணங்கிச் சில நாட்கள் தங்க வேண்டியதாயிற்று.

குறிப்பிட்ட நாளில் அவன் வராததைக் கண்டு நக்கண்ணைக்குக் கவலையுண்டாயிற்று. அவளுக்குப் பிரசவ நோய் கண்டதும் தன் கணவனுக்கும் அதே சமயத்தில் தன் தந்தைக்கும் ஒருவருமறியாமல் செய்தி அனுப்பினாள்.

ஆனால் மூத்தவள் இப்போது நல்லவள்போல நடந்துகொண்டாள். மிகவும் அன்பாக அவளுக்கு உதவிகள் புரிய வந்தாள். தானும் நிறை சூலியாக இருப்பதுபோல விடாமல் நடித்து வந்தது கண்டு, நக்கண்ணைக்கு அதிகக் கவலையாகவே இருந்தது.

இளநாகனும் வரவில்லை; அவள் தந்தையும் வரவில்லை. அதற்குள் நக்கண்ணை பிரசவ வேதனையில் துடி துடித்துவிட்டாள். சரியான உபசரணையின்றி, அவள் மயக்கமுற்றுவிட்டாள்.

அழகான ஆண் குழந்தை ஒன்று, 'குவா, குவா' என்று

அவள் பக்கத்திலே கிடந்து அலறியது. நக்கண்ணையோ கண்களைத் திறக்கவில்லை. அவள் தன் நினைவின்றிக் கிடந்தாள். மூத்தாள் மனமும் வயிறும் பற்றி எரிந்தன. தன் வயிற்றில் பிறக்காத ஆண்பிள்ளை, வேட்டுவச்சியின் வயிற்றில் பிறப்பதா என்று ஆத்திரம் கொண்டாள். தன்னுடைய வேலைக்காரியின் உதவிகொண்டு அந்தக் குழந்தையை அப்புறப்படுத்திவிட்டு, ஒரு மரக்கட்டைக் குழவியை எடுத்து வந்து அவள் பக்கத்திலே போட்டுவிட்டாள்.

பிறகு அந்தக் குழந்தையைத் தன்னருகில் போட்டுக் கொண்டு, தானும் பிரசவித்தவளைப்போல் படுத்துக்கொண்டாள்.

இளநாகனுக்குச் செய்தி சென்றது. நக்கண்ணை மயக்கம் தெளிந்து, கண்விழித்துப் பார்த்தாள். பக்கத்திலே குழந்தைக்குப் பதில் மரக் குழவிதான் கிடந்தது. அவள் நெஞ்சு துணுக்குற்றது. மூத்தாளுக்கு அழகான குழந்தை பிறந்திருப்பதாகக் கேள்விப்பட்டு, அவள் உள்ளம் பதறினாள். அது தன் குழந்தை தான் என்பதில் அவளுக்குச் சந்தேகமே இல்லை. அது மூத்தவளுடைய குழந்தையில்லை என்பதை எப்படி நிரூபிப்பது? அதை அங்கே யார் நம்புவார்கள்? அவளிடமிருந்து தன் குழந்தையை எவ்வாறு திரும்பப் பெறுவது? எதற்கும் தன் கணவன் வரட்டும் என்று பொறுத்துக்கொண்டிருந்தாள்.

ஆனால் மூத்தாள் இவ்வளவோடு நின்றாளா? நின்றுதான் விடுவாளா? இரண்டும் இல்லை. இந்தக் கொடுமைக்கெல்லாம் சிகரம் வைத்தது போல, பெரிய தீங்கு ஒன்றைச் செய்யத் துணிந்துவிட்டாள்.

மரக் குழவியை ஈன்ற நக்கண்ணைமீது இளநாகன் கோபம் கொண்டிருப்பதாகவும், அவளை உடனே ஊரைவிட்டு விரட்டும்படிச் சொல்லிவிட்டதாகவும் ஒரு கதையைக் கட்டிவிட்டாள்.

பாவம், நக்கண்ணை என்ன செய்வாள்? கணவனும் வரவில்லை; தந்தையும் சமயத்துக்கு வரவில்லை. அவர்கள் விரட்டுவதற்கு முன்பாக, அந்த இடத்தைவிட்டுப்போய் விட அவள் எண்ணினாள். அதற்கு அவளுடைய பழைய துணிவும் அஞ்சா நெஞ்சமும் துணை செய்தன. போகும்போது, அவள் யாருக்கு அஞ்சவேண்டும்? கணவனே விரட்டும்படி சொல்லி விட்ட பிறகு, அவள் எ ற்காக அங்கே இருக்கவேண்டும்? பாவம், மற்றதையெல்லாம் நம்பாத நக்கண்ணை, இந்தக் கதையை மட்டும் நம்பிவிட்டாள். அதைத்தான் போதாத காலம் என்பது.

போவதற்குமுன் ஒரு முறையாவது தன் குழந்தையின் முகத்தைப் பார்த்துவிட்டுப் போகவேண்டும்போல் அவளுக்கு ஆசையாக இருந்தது. யாராவது தடுத்தால், எதிர்ப்பது என்று கூட அவள் துணிந்துதான் சென்றாள். ஆனால், என்ன ஆச்சரியம்!

இத்தனை துரதிருஷ்டத்திலும் ஒரு துளி நல்ல அதிருஷ்டம். அங்கே குழந்தை மட்டும்தான் தனியாக இருந்தது. பக்கத்திலே யாரையும் காணவில்லை. அவளைக் கண்டதும் அந்தக் குழந்தை காலையும் கையையும் உதைத்துக்கொண்டது.

அதை அவள் அப்படியே வாரியெடுத்தாள். மார்போடு அணைத்து, உச்சி மோந்தாள்; பாலூட்டினாள். பிறர் வந்து ப ர்ப்பதற்குள்ளாக அந்த இடத்தைவிட்டு, குழந்தையோடு வெளியேறிவிட்டாள்.

பாதையில் - நடுவழியில் அவள் தந்தை மட்டும் எதிர்ப் பட்டிராவிட்டால், அவள் உயிரோடு மீண்டுவந்திருப்பதே அரிது தான்.

அந்தக் குழந்தைதான் செங்கணன்; அந்த நக்கண்ணைதான் இந்த அன்னை! அந்த இளநாகன்தான் இப்போது காளிகோட் டைக்கு வந்திருக்கும் நாகர் தலைவனான நாக அரசன்!

கதையைக் கேட்டு நெடுமாறன் அப்படியே கல்லாய்ச் சமைந்துபோயிருந்தான். அவன் மனத்திலே பற்பல ஐயங்கள் எழுந்தவண்ணம் இருந்தன.

(தொடரும்

மியாவ்! மியாவ்!!

ஜி. வேங்கடாசலபதி



மியாவ் மாமா, மியாவ் மாமா
எங்கே போறீங்க?
வேலை வெட்டி இல்லை யென்றால்
இங்கே வாருங்க!
பஞ்சுக் காலை உள்ளே வைத்து
எங்கே போனீங்க?
தஞ்சு எலியைக் கொடுமை யாகக்
கொன்ற தேனுங்க?
ஆபீ சுக்கு அப்பா போகும்
நேரம் ஆச்சுங்க!
அப சகுனம் போல் குறுக்கே
போயி டாதீங்க!

கதை: ஆர்வி

கடற் புலி

சித்திரம்: ஸாமி.


கிழவன் தனியே சென்று முககூவரம் செய்து கொண்டு தாடியும் மீசையுமில்லாமல் வருகிறான் . . . .
உங்களை அடையாளமே தெரியவில்லையே!
ஆனால் உன் பாட்டனுக்கு இப்பொழுது அடையாளம் தெரியும்.
ஆ! சோழ நாட்டு அரசன்!
ஆமாம்., உன் மகள் பல்லவியின் கணவன்! நிகரற்ற இந்தக் கடற்புலியின் தந்தை!
கடற்புலி வியப்பில் ஆழ்ந்து நிற்க, தலைவன் ஒரு வீரனை அழைத்து ஏதோ சொல்கிறான்.
உத்தரவு
கடற்புலியின் அன்னை ஓடி வருகிறாள். பின்னால் அந்த வீரன் பணிவோடு நிற்கிறான்.
குழந்தாய்! என் செல்வமே!

(தொடரும்)

கோலப் புத்தகம்

திருச்சி அண்ணு

பாத்திரங்கள்: விமலா, ராஜம், ஜயா, அத்தை ஆகியோர்.

காட்சி - 1

இடம்: வீட்டு வாசல்:

(விமலா, பாடிய வண்ணம் கோலம் போட்டுக்கொண் டிருக்கிருள். ராஜம் அருகே வந்து கை தட்டுகிருள்.)

ரா: பலே! பலே! விமலா! பலே! பலே!

வி: [நிமிர்ந்து அவளை நோக்கி] வா, ராஜம்! எதுக்கு இந்தப் பலே?

ரா: உன்னுடைய பாட்டுக்கும் இந்த அழகான கோலத்துக்கும் தான்!

[ஜயா வருகிருள்]

ஜ: என்ன, பிரமாதமாகக் கோலம் போட்டுக் கிழிச்சா இந்த விமலா? இதற்குப் போய் பலே போடறியே!

ரா: என்ன ராஜம்! நீதான் பேசறியா? விமலா அழகாகக் கோலம் போட்டால், நீ பெருமைப் படவேண்டியிருக்க, இப்படி ஆத்திரப்படலாமா? உன் தங்கை இல்லையா இந்த விமலா?

ஜ: ஆமாம் தங்கையுமாச்சு; அக்காளுமாச்சு! என்னமோ அவள் பிரமாதமாக் கோலம்போட் டிருக்காளாம்! இதுக்கு இவள் அவளைத் தலையிலே வச்சுக் கூத்தாடருளாம்!

ரா; ஜயா, ஆத்திரப்படாதே! ஆறுவது சினம்! கொஞ்சம் இந்தக் கோலத்தைப் பார்த்துட்டுப் பேசு. ஆகா! எவ்வளவு அழகு! [விமலாவிடம் திரும்பி] விமலா! இதுக்குப் பேர் என்ன? இது என்ன கோலம்?

வி: இந்தக் கோலத்துக்குப் பேரு, பாரிஜாதக் கொடி,

ஜ: பாரிஜாதக் கொடியோ, கிரிஜாதக் கொடியோ! இந்த அழகுக் கோலத்தை நீயே பாத்திட்டு நில்லு? இதைவிட அழகு அழகாக் கோலம் போட்ட புத்தகம் என்னிடம் இருக்கே, தெரியுமா உனக்கு? என் கிட்டே இருக்கிற கோலப் புத்தகம் போல, வேறே யாரிடம் இருக்கு? விரலை மடக்கு.

ரா: புத்தகம் இருந்து என்ன பிரயோஜனம்? உன் தங்கையைப் போல, கோலம் போட வருமா உனக்கு?

ஜ: இரு இரு! விமலா, என்னைக் கேலியா பண்றே?

வி: நான் ஒண்ணும் பேசலியே அம்மா. என் கிட்டே வம்புக்கு வராதே.

ஜ: நீ ஏன் வாசலிலே வந்து, இந்தக் கோலம் போட்டே? அதனுல்தானே இத்தனையும்?

ரா: நல்லா இருக்கே உன் பேச்சு. உன்னை வந்து கோலம் போட வாண்டாமின்னு, இவள் தடுத்தாளா?

ஜ: இவளுக்கு வக்காலத்து வாங்கிப் பேச, நீ யாரு?

ரா: (கேலியாக) என்னைத் தெரியலையா: என் பேரு ராஜம், அடுத்த வீட்டுப் பெண்.

ஜ: (கோபமாக) என்னடி இது! இருங்கடி இருங்க. ரெண்டு பேருமாச் சேர்ந்து பேசிக்கிட்டு, என்னைப் பரிகாசம் பண்றீங்களா? இதோ அம்மாகிட்டே போய்ச் சொல்லி, உங்களை என்ன செய்யறேன். பாருங்க. அம்மா, அம்மா!

(உள்ளே போகிருள்)

ரா: இருந்தாலும் விமலா, உன் அக்கா ஜயாவுக்கு இவ்வளவு ஆத்திரம், அசூயை உதவாது!

வி: அவளுக்குக் கோலம் போட வரமாட்டேங்குது. அதான் ஆத்திரம் ஆத்திரமா வருது; அழுகை வருது. ஆனு அவள் கிட்டே, ரொம்ப நல்ல கோலப் புத்தகமெல்லாம் இருக்கு.

ரா: கோலப் புத்தகம் இருந்து என்ன புண்ணியம்? அந்தக் கோலம் போட உனக்குத்தானே தெரியுது. நேத்து உன்கிட்டே கத்துக்கிட்டுப் போனேனே, வில்வதளக் கோலம்,

அதான் எங்க வீட்டு வாசலிலே போட்டிருக்கேன். அடுத்த வீட்டு அலமேலு பாவக்காய்க் கோலம் போட்டிருக்காள்.

வி: அதுவும் நான் சொல்லித் தந்த கோலம்தான்! வீட்டில் இந்தக் கோலம் போடறதிலே எவ்வளவோ பலன் இருக்கு. விடியற் காலையிலே எழுந்து, புள்ளி புள்ளியா வச்சு, குனிந்து, நிமிர்ந்து கோடு இழுத்துப் பொறுமையாக் கோலம் போடறதே ஒரு நல்ல உடற் பயிற்சி.

ரா: முன் வாசலிலே கோலம் இல்லாவிட்டால், என்ன ஏதுன்னு எல்லாரும் விசாரிக்க வேறு வந்து விடுவார்கள் இல்லையா?

வி: அது வாஸ்தவம்தான், ராஜம். அதுவும் பிரமாதமான பெரிய கோலம் போட்டிருந்தால் வீட்டிலே ஏதோ விசேஷம்னு ஊருக்கெல்லாம் தெரிந்துவிடும்!

ரா: ஆமாம், நீ போட்டிருக்கிற கோலம், உங்க வீட்டுலே ஏதோ விஷேம்னு சொல்லுதே, என்ன விசேஷம்?

வி: ஆமா ஆமாம். விசேஷம் தான். எட்டு மணிக்கு எங்கள் அத்தை ஊரிலேருந்து வருகிறுள்.

ரா: ஓகோ! அதான் பாட்டும் கோலமும் குமாளி போடுதா? சரி. சரி.

(ஜயா வருகை)

ஜ: உள்ளே வா. குமாளியும், குஷியும் தெரியும். அம்மா கையிலே விறகுக் கட்டை இருக்கு!

ரா: என்ன விமலா, இப்படிப் போட்டி போடுது உன் அக்கா? ஏன் அவளுக்கு இவ்வளவு ஆத்திரம், உன் மேலே?

வி: இது ஒண்ணும் புதிசு இல்லே, ராஜம்! அக்கா குணமே இப்படித்தான்.

காட்சி-2

விமலா வீடு; ஜயா, விமலா, அத்தை.

[மணி எட்டு அடிக்கிறது- வண்டி மாட்டின் சலங்கை ஒலிக்கிறது. அத்தை உள்ளே வருகிறுள்.]

ஜ: அதோ, அத்தை வந்துட்டாள், அத்தை!

வி: (ஓடி வந்து) அத்தை! அத்தை! வாங்க, அத்தை!

ஜ: நான்தான் முன்னுலே ஓடி வந்தேன், இல்லையா அத்தை?

வி: நான்தான், 'வாங்க அத்தை' என்று முன்னுலே அழைத்தேன், இல்லையா அத்தை?

ஜ: வாயாலே அழைச்சாப் போதுமா? நான்தான் பார்த்து விட்டு முன்னுலே ஓடினேன். எனக்குத்தான் அத்தை கிட்டே ரொம்பப் பிரியம்.

அ: எதுக்கு ஜயா இப்படிச் சண்டை? ரெண்டு பேருக்குமே என் கிட்டே பிரியம்தான். வீண் தர்க்கம் வாண்டாம். இந்தா ஜயா, கலர் ரிப்பன்.

வி: எனக்கு இல்லையா, அத்தை?

அ: இதோ தர்றேன், விமலா: அவசரப்படாதே; இந்தா உனக்கு?

ஜ; அட..ஒரேமாதிரியா வாங்கி இருக்கிங்களே!..

அ: ஆமாம். உங்களுக்குள்ளே வித்தியாசம் காட்டலாமா? இதோ பாருங்க, கோலப்புத்தகம்.

ஜ: கோலப்புத்தகம் எனக்குக் கொடு, அத்தை!

வி: எனக்குக் கொடு அத்தை!.. அக்காகிட்டே முந்தியே ஒரு புத்தகம் இருக்கு; எனக்குத்தான் இல்லே;

ஜ: இல்லாதவளுக்கு என்ன கவலே? இருக்கிறவாதான் சேர்க்கணும்.

வி: பாருங்க, அத்தை. அக்காவை..

ஜ: அத்தை என்னடி அத்தை!.. நத்தை!

அ: இந்தாடி ஜயா, இப்படியெல்லாம் பேசினியோ, உன்னிடம் பேசவே வர மாட்டேன். என்ன துடுக்குத்தனம் உனக்கு? இருக்கிறதோ ஒரு புத்தகம். இன்னெரு புத்தகம் ஊரிலே கிடக்கு. எடுத்துவர மறந்து போச்சு - உங்க ரெண்டு பேருக்குமே இந்தப் புத்தகம் கிடையாது. உங்க போட்டாபோட்டியும் சண்டையும் போதும்டியம்மா! சகிக்கலேயே போங்க! போங்க!

காட்சி-3

முன்வாசல் - அத்தை; ஜயா அத்தையின் கையில் உள்ள புத்த

கத்தைப் பார்க்கிருள். ஜயாவின் பக்கத்தில் கட்டுப்புத்தகம்;

ஜ: அத்தை..இந்தக் கோலப் புத்தகம் ரொம்ப அழகா இருக்கு அத்தை! இதுபோல என்கிட்டே ஒன்றுகூட இல்லே.

அ: அதுக்காக?

ஜ: என்கிட்டேயே கொடுங் களேன்.

அ: எப்படியம்மா கொடுக் கிறது?

ஜ: நீங்க மனசு வச்சா, எனக்கே கொடுக்கலாம். அத்தை..'மன மிருந்தா இடமுண்டு.'

அ: உன்னைப் போலத்தானே விமலா, உன் தங்கை?

ஜ: இதோ பாருங்கோ அத்தை. எத்தனை புத்தகம் சேர்த்து வச்சிருக் கேன்! இந்தப் புத்தகத்தையும் கொடுத்தா, சேர்த்து அழகா வச்சிருப்பேன்.

அ: அழகா வச்சிருக்கவா புத் தகம்? உபயோகப்படுத்த வாண் டாமா? அட, நிறைய இருக்கே உன்கிட்டே புத்தகம்! ஆமை ஒடு முதலான கோலங்கள்! நண்டும் நத்தையும் கோலக்கோவை! தெப் பக்குளம்-கோலக் கடல்! எத்தனை புத்தகங்கள்! அடடே புத்தகம் கீழே விழுந்திட்டுதே.

(புத்தகம் கீழே விழுகிறது)

ஜ: நான் எடுத்துத் தர்றேன், அத்தை!

[புத்தகத்தை எடுத்து அத்தை யிடம் தருகிருள் ஜயா]

அ: இதென்ன புத்தகம்? வில்வ தளம் - கோலக்கொத்து! அடே யப்பா! இத்தனை புத்தகம் வச்சுக் கிட்டுத்தான் போட்டி போடறியா?

ஜ: ஆமா. அத்தை! நான் போட்டி போடறதிலே, பாயிண்டு இருக்கு, அத்தை.

அ: அதென்னடி அம்மா பாயின்ட்?

ஜ: பாயிண்ட் ஒன்று-புத்தகத் தோடு புத்தகமா இருக்கும்! பாயிண்டு ரெண்டு, விமலாவுக்குப் புத்தகத்தை ஒழுங்கா வச்சுக்கத் தெரியாது! பாயிண்டு மூணு, விமலாவுக்குக் கோலப் புத்தகம்

அந்தோ, பாவம்!

தெருவில் சென்று கொண்டிருந்தேன். அதோ . . தூரத்தில் . . தெருவினோரத்தில்—அடுத்த டெஸ்ட் மாட்சுக்கு இப்போது முதலே தங்களைத் தயார் செய்து கொள்ளும் இளஞ்சிறார்களின் கிரிக்கெட் ஆட்டம். அதோ, ஒரு சிறுவன்—எம்பி வரும் பந்தை வீசி அடிக்கிறான் மன்காடைப்போல். ஸிக்ஸர் அடிக்கப்பட்ட பந்துக்கு என் காலில் ஆசை. எனக்கோ வலி—எரிச்சல் வேதனை! கெஞ்சிய சிறுவர்களின் வேண்டுகோளுக்கு மறுத்துத் தூக்கி எறிகிறேன் பந்தை. அந்தோ, பாவம்! மற்றொரு வழிப்போக்கனது காலில் அதுபட, அவன் கதற, நான் பீதியால் ஓட . . சிறுவர்கள் நகைத்து நிற்க . .

—ஸி. சந்திரா.

தேவையில்லை, அவளே நல்லா கோலம் போடுவாள்-பாயிண்டு நாலு,

அ: பாயிண்டு நாலு, உனக்குக் கோலம் போட வராது-ஆனா புத்தகம் நிறைய இருக்கு. அப்படித்தானே?

ஜ: ஆமா அத்தை! கோலம் போட, எனக்கு விமலா சொல்லித் தரமாட்டேங்குது! அதான் அவள் கிட்டே கோபம். என் கோலப் புத்தகங்களை அவள் கண்ணிலேயே காட்டறதில்லை. இந்தப் புத்தகத்தை அவளுக்குக் கொடுக்காதிங்க அத்தை. நான் வீட்டுக் கணக்குப் போடப் போறேன். சொன்னது ஞாபகம் இருக்கட்டும்.

அ: ஆகட்டும், பார்க்கலாம்.

[ஜயா போகிறாள்-விமலா வருகிறாள்]

வி: அத்தை, ஜயா என்ன சொல்லிட்டு போகிறாள்?

அ: உன்கிட்டே புத்தகம் கொடுக்காதேன்னு சொல்லிட்டுப் போனாள்.

வி: பாத்தீங்களா அத்தை, அக்காவுக்கு இருக்கிற பொறாமை..

அ: நீதான் விட்டுக்கொடேன். ஜயாகிட்டே உனக்கு என்ன கோபம்?

வி: என்னைக் கண்டா, கோலப் புத்தகத்தை மூடி மூடிப் பதுக்குவாள் அத்தை! அவள் கிட்டே அதான் கோபம்! அப்போ என்னதான் கெஞ்சினாலும், கோலம் போடச் சொல்லித் தர மனசு வருமா, அத்தை?

அ: கோலப்புத்தகம் எல்லாம் காட்டினால், உனக்குச் சந்தோஷம்; அக்காவுக்குக் கோலம் போடச் சொல்லித் தருவே, இல்லையா?

வி: ஆமா அத்தை!

அ: இப்போ என்கிட்டே சொன்னதையெல்லாம், அக்காகிட்டே சொல்லிப் பாரேன். ரெண்டு பேரும் போட்டி போடாமல், ஒத்துமையா வந்து கேட்டா, என்னிடம் புத்தகம் கிடைக்கும். இல்லாத போனா இல்லைதான். புரியறதா?

வி: புரியறது அத்தை.

அ: நான் மாமாவுக்கு ஒரு கடிதாசு எழுதிப்போடணும். வரட்டுமா? யோசனை பண்ணி முடிவைச் சொல்லு!

வி: சரி..அத்தை.

[அத்தை போகிறாள்-ஜயா வருகிறாள்]

ஜ: என்ன விமலா, யோசனை பண்ணி முடிச்சியா? உன் முடிவு என்ன? அத்தை பிடிவாதமாய் இருப்பதால், நாம் இரண்டு பேரும் சேர்ந்து ஒற்றுமையாகப் போனால் என்ன?

விம: நான் ரெடி, அம்மா.. உன்மேலே எனக்கு என்ன கோபம்? என் கண்ணிலே நீ கோலப் புத்தகமே காட்டறதில்லை. பாரு, அதான் கோபம்.

ஜ: நீ எனக்குக் கோலம் போடச் சொல்லித் தர மாட்டேங்கறே பாரு, அதான் உன்மேலே கோபம்! நான் இனிமே புத்தகம் காட்டறேன்! நீ சொல்லித் தருவியா?

வி: சரி, நான். ரெடி! யாரெல்லாமோ வந்து, என் கிட்டே கோலம் சொல்லிக்கிட்டுப் போறாங்க - உனக்குச் சொல்லித் தர மாட்டேனா?

ஜ: அப்படியானா, நிச்சயமாக கோலப் புத்தகத்தை உனக்குக் காட்டுவேன்.

காட்சி-4

விமலா வீடு; அத்தை, விமலா, ஜயா, ராஜம்

[அத்தை கோலப் புத்தகத்தைப் புரட்டுகிறாள்.]

ஜ: அத்தை உங்க கோலப் புத்தகத்தை, விமலா கிட்டேயே கொடுங்க.

விம: இல்லே அத்தை! அக்கா கிட்டேயே கொடுங்க! எனக்குச் சம்மதம்!

அத்: உனக்கு வேண்டாமா விமலா?

விம: யார் கிட்டே இருந்தால் என்ன, அத்தை? இனிமே கோலப் புத்தகம் எல்லாம், ரெண்டு பேருக்குமே பொது.

ஜ: ஆமாம் அத்தை. . நானும் தங்கையும் இனிமே போட்டி போடமாட்டோம். ஒற்றுமையாக இருப்போம்.

அத்: அப்போ சரி! இந்தா விமலா, புத்தகம்!

விம: இது என்ன புத்தகம்? 'தெப்பக்குளம்-கோலக் கடல்!'

ஜ: அட சே!. . இதுக்குத்தானா, இவ்வளவு ஆர்ப்பட்டம்? நீயே வச்சுக்கோ, அந்தப் புத்தகத்தை.

விம: இல்லே. . நீயே வச்சுக்கோ. உன்கிட்டேயே இருக்கட்டும்.

ஜ: கோபமாக அட சே கிட்டே வராதே! உன் புத்தகம் உன்கிட்டே! என் புத்தகம் என் கிட்டே!

விம: அப்படியானால் பழையபடி 'டு'வா.

ஜ: ஆமாம்! அப்படித்தான்!

விம: இதுக்குள்ளே சொன்ன சொல் மறந்து போச்சா அக்கா! இது நியாயமா?

ஜ: போடி புழுக்கை! மகா நியாயத்தைக் கண்டவள்தான் நீ!

அத்: இந்தா ஜயா, நீ பேசறது நல்லாயிருக்கா?

ஜ: எனக்கு யாரும் புத்தி சொல்ல வாண்டாம். தன்னாலே வரும் புத்தி.

அத்; அட பூஜ்யமே! வரத்தான் போகுது. அதிருக்கட்டும். தெப்பக்குளம்-கோலக்கடல் என்கிற புத்தகம், உன் கிட்டே இருக்கா? நிச்சயமாச் சொல்லு.

ஜ: இதோ கொண்டு வர்றேன், பாருங்க. (உள்ளே போகிறாள்)

விம: புத்தகத்தைப்புரட்டிவிட்டு அட, இதென்ன அத்தை இந்தப் புத்தகத்திலே அக்கா பேரு எழுதியிருக்கு.

அத்: சிரித்துக்கொண்டே ஆமாண்டி ஆமா. . இது அவள் புத்தகம்தான். நம்மையெல்லாம் ஜயா ஏமாத்தப் பார்த்தாள். . இப்போ அவளே ஏமாந்து போய் விட்டாள்; இல்லையா?

ஜ: (திரும்பி வந்து) அத்தை, என் புத்தகத்தை வச்சே, என்னை ஏமாத்தலாமா? இது நியாயமா?

அத்: ஐயா..நீ எப்படியோ அப்படித்தான் பிறர் உன்கிட்டே நடப்பாங்க, புரியுதா? தங்கையும் நானும் ஒற்றுமையா இருப்போம்னு சொன்னியே! அந்தச் சொல்லை உடனே காற்றிலே வாரி விட்டியே! அது நியாயமா?

(எல்லாரும் சிரிக்கிறார்கள்.)

ஜ: என் புத்தகம் உங்ககிட்டே எப்படி வந்தது?

அத்: உன் கட்டுப்புத்தகத்தை நீ காட்டும்போது, இது கீழே விழுந்துவிட்டது. புத்தகத்து மேலே, உனக்கு எங்கே கருத்து! வம்புச் சண்டையிலேதானே உனக்குக் கருத்தெல்லாம்! புத்தகத்தைச் சேர்த்து வைக்கிறதிலே ஒரு பெருமை! தங்கையைக் கண்டால், அலட்சியம், பெரியவங்களைக் கண்டால் அலட்சியம்.

ஜ: இனிமே இல்லை! அத்தை! மன்னிப்பீங்களா? பட்டதெல்லாம் போதும்; இனி மறக்க மாட்டேன்! முந்தி சொன்னமாதிரி, தங்கையோடு ஒற்றுமையாய் இருப்பேன். அன்பு காட்டுவேன். இது நிச்சயம்.

அத்: இது உறுதிதானே பின் வாங்கமாட்டியே.?

ஜ: இல்லை அத்தை! இது உறுதி.

அத்: அப்படியானால் சந்தோஷம். இந்தா, நான் கொண்டு வந்த கோலப் புத்தகங்கள்!

ஜ: அடடே..நாலஞ்சு புத்தகம் விழுதே அத்தை! ஒரு புத்தகம் தானே கொண்டு வந்திருக்கேன்னு சொன்னீங்க?

அத்: அதெல்லாம் அக்கா தங்கைகளுக்குள்ளே ஒற்றுமை ஏற்படத்தான் இந்த நாடகம் நடத்தினேன். புரிகிறதா?

ஜ: [மகிழ்ச்சியுடன்] எல்லாப் புத்தகங்களும் இனி எங்கள் இரண்டு பேருக்கும் பொதுதான். விமலா, நீயே வந்து இவைகளை வாங்கிக்கொள்.

(திரை)

எங்கும் நியூட்ரின் என்பதே பேச்சு!

குழந்தைகளுக்கு நியூட்ரின் டிரம் மிகவும் விருப்பம். ஏனெனில் நியூட்ரின் கம்பெனியார் மிட்டாய்களை மிக அழகாகப் பாக் செய்வதில் ஒரு புதிய முறையைக் கையாள்கின்றனர். சுவைமிக்க நியூட்ரின் மிட்டாய்களும் டாபிகளும் கவர்ச்சியான பெட்டிகளில் வழக்கமான விலைக்கே கிடைக்கும்.

உங்கள் இனிமை
ஆனந்தத்துக்கு

தி நியூட்ரின் கன்பெக்ஷனரி கோ., லிட்.,
சித்தூர் - ஆந்திரப் பிரதேஷ்.

நீங்களும் நானும்

ஆர்வி

வே. நாராயணன், தில்லைநகர்

கே: உங்களைப் பார்க்க எத்தனையோ தம்பி தங்கைகள் ஆவலுடையவர்களாக இருக்கிறார்கள். அதற்குத் தங்கள் புகைப்படத்தைக் கண்ணனில் வெளியிடுவீர்களா?

ப: என் எழுத்தின் மூலம் என்னைப் பாருங்கள், போதும். என் படத்தின் மூலம் என்னைப் பார்க்க விரும்பாதீர்கள்.

கே. ரவிசந்தர், திருச்சி - 3

கே: பனி மனிதர் என்பவர் யார்?

ப: இமய மலையின் உறைந்த பனிப் பிரதேசங்களில் பனி மனிதர் வாழ்கிறார்கள். இந்தப் பனி மனிதருடைய பிரம்மாண்டமான காலடிகளைக் கொண்டு இவர்களை ராட்சப் பனி மனிதர்கள் என்று பலரும் கருதுகிறார்கள். ஆனால் இவர்களில் ஒருவனைக்கூட இதுவரையில் எவ்வளவோ முயன்றும் யாரும் கண்டதில்லை.

வி: நாராயணன், சென்னை . 4

கே: இப்பொழுது சுதேசமித்திரனில் தொடர்கதை எழுதும் ஆர்வியும் கண்ணனில் எழுதும் ஆர்வியும் ஒருவர் தானா?

ப: ஆமாம்.

ஸி. சுபாஷ்சந்திரன், மாயவரம்

கே: தலைக்குச் சோப்புத் தேய்த்துக் கொள்வதால் தலைமயிரின் பளபளப்பு மங்கி, நரைத்துவிடும் என்பது உண்மையா?

ப: உண்மைதான்; தலையில் வழுக்கையும் விழுந்துவிடும் என்று சில வைத்தியர்கள் திடமாகக் கூறுகிறார்கள்.

இந்திரகுமார், யாழ்ப்பாணம்

கே: முகத்துக்குப் பவுடர் போடுவது அவசியமா?

ப: சுண்ணும்புப்பொடி கலக்காத உயர்ந்த வாசனைப் பவுடர்களைப் பெண்கள் உபயோகிக்கலாம். ஆண்களுக்கு இது அவசியமேயில்லை.

எஸ். பிரபு, முதுகுளத்தூர்

கே: எங்கள் வீட்டில் ஒரே சந்தாதார்தான். ஆனால் போட்டியில் நாங்கள் மூவர் சேர விரும்புகிறோம். என்ன செய்வது?

ப. மூவரும் சந்தா எண்ணைக் கூப்பனிலே குறிப்பிட்டால் போதும்.

ஆர். வரதப்பன், அறியாக்கவுண்டன் பட்டி

கே: உலகிலேயே மிகப் பெரிய ரேடியோ நிலையம் எது?

ப: லண்டனிலுள்ள பி. பி. ஸி. ரேடியோ நிலையம்தான். பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் கார்ப்பரேஷன் என்பதன் சுருக்கமே பி. பி. ஸி.

ஆர். மகேந்திரவர்மன், அம்பத்தூர்

கே, வடக்கு வளர்கிறது; தெற்கு தேய்கிறது என்பது உண்மையா?

ப: யார் சொன்னது அப்படி? தெற்கே எவ்வளவு அருமையாக, செழிப்பாக வளருகிறது தெரியுமா, துவேஷம்? ஜாதித் துவேஷமும் மொழித் துவேஷமும் நாளொரு மேனியும் பொழுது ஒரு வண்ணமுமாக வளர்க்கப்படுகிறது.

கே. நடராஜன், ஆம்பூர்

கே: இங்கு இரவு 7.45 - க்குக் கேட்கும் பி. பி. ஸி. ஒலிபரப்பின் போது லண்டனில் இரவா, பகலா? அங்கே அப்போது மணி என்ன?

ப: மாலை 2 - 20 மணி.

மு. சுப்பிரமணியன், வாணியம்பாடி

கே: டாக்டர் மு. வ. வைப் பற்றித் தங்கள் கருத்து. .

ப: அறிஞர்; பண்புமிக்கவர்; நல்ல எழுத்தாளர்.

ஆர். ராமலிங்கம், தஞ்சை.

கே: பேச்சு எத்தனை வகைப்படும்?

ப: மூன்று வகையாக அதைப் பிரிக்கலாம். நகைச்சுவை கலந்த சரளமான பேச்சு; காரண காரியம் கலந்த தர்க்க ரீதியான பேச்சு; உள்ளத்தைக் கிளர்ச்சியுறச் செய்கிற அனல் கக்கும் பேச்சு. இந்த மூன்று பெரும் பிரிவுக்குள் பேச்சு வகைகளை அடக்கிவிடலாம்.

ரா. சு. தங்கராஜ், திருவண்ணாமலை.

கே: குறும்புக்காரப் பையனை எப்படி அடக்குவது?

ப: குறும்புத்தனம் இரண்டு வகைப்படும். ஒன்று எல்லாரும் ரசிக்கக்கூடியது; மற்றொன்று பிறரைப் பாதிப்பது. புண்படுத்தும் குறும்புத் தனத்தை அடித்தோ, அடக்கியோ வழிக்குக் கொண்டு வர முடியாது. அதன் போக்கில் விட்டுவிட்டால் அது தானாகவே சில நாளில் அடங்கி விடுகிறது. அன்புக்குக் கட்டுப்படாத குறும்புத்தனமே யில்லை.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம்...................

....

பிறந்த தேதி..............

(தேதி, மாதம், வருஷம்

ஜூலை-15, 1958

எஸ். எம். எம். நிலையம்,

கொழும்பு-13.

கே: ஆண்களும் பெண்களும் எத்தனை வயது வரையில் வளருகிறார்கள்?

ப: சாதாரணமாக ஆண்கள் 22 வயதுக்குப் பிறகும் பெண்கள் 18 வயதுக்குப் பிறகும் உயருவதில்லை. வளர்ச்சி என்பது அதுதான். ஆனால் பருமனாவது என்பது வேறு. நாற்பது வயதுக்குள் மூன்று முறை ஆணும் சரி, பெண்ணும் சரி, மாறுகிறார்கள்.

பி. ஆர். ராஜரத்தினம், திருச்சி-4.

கே: என் கால்களில் எப்பொழுதும் வேர்வை கசிகிறது. இதற்கு என்ன செய்யலாம்?

ப: இதற்குச் சிகிச்சை ஒன்றும் இல்லை என்கிறார்கள் டாக்டர்கள். ஆனால் குளிர்ந்த நீரில் நீராடி வந்தால் இது குறையலாம் என்பது டாக்டர்கள் கருத்து.

ஏ. எம். சுல்தான், பினாங்கு.

கே: சீனா என்பது இந்தியர்கள் வைத்த பெயரா?

ப: இருக்கலாம். சீனஸ்தானம் என்ற சம்ஸ்கிருதச் சொல்லிலிருந்து ஸீனா என்ற லத்தீன் பெயர் வந்ததாம். சீன நாட்டின் முன் காலப் பெயர் தீன்-ஹி என்று நான் படித்திருக்கிறேன். தீன்-ஹி என்றால் சொர்க்கத்துக்கு அடியில் உள்ள நாடு என்ற பொருள். சீன் என்ற அரச வம்சம் அதை ஆளத் தொடங்கியதிலிருந்து அதன் பெயர் சீனாவாக மாறிவிட்டது.

என். மோகன், பம்பாய்-41.

கே: இன்பத்துக்கு வழி என்ன?

ப: அந்த வழியை ஆராய்ந்து, அநுபவித்துப் பார்ப்பதுதான் வாழ்க்கை.

ஆர். டி. சேகர்,

திருப்பாதிரிப்புலியூர்.

கே: சினிமாவை நீங்கள் ஏன் வெறுக்கிறீர்கள்?

ப: சினிமாவை நான் வெறுப்பதாகக் கூறுவது தவறு. சினிமா நடிகர்களைப்பற்றி நம் சிறுவர் சிறுமியர் ஓயாமல் கேள்வி கேட்பதை நான் விரும்பவில்லை. நீங்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய நல்ல விஷயங்கள் எவ்வளவோ உள்ளன.

ஒரு கிளைப் பறவைகள்

ஜே. எம். சாலி

நிதார் அந்தச் சின்னஞ்சிறு வீட்டி லிருந்து வெளியே எட்டிப் பார்த்தபோது வெயில் நன்ருகக் காய்ந்துகொண் டிருந்தது. அவன் தெருவில் நடந்தான். லேசான காற்றுத் தவழ்ந்துகொண் டிருந் தது. சிவப்பு நிஜார் ஒன்றை நிதார் அணிந்திருந்தான். பழைய துண்டு ஒன்று அவன் தோளிலே புரண்டது. அரிசிலாற்றில் குளிக்கப் போகும் ஆனந்தம் அவனுக்கு. வாளிப்பான அவன் உடம்பிலே எத்தனை வனப்பு! கட்டான உடல் அவனுக் குக் களையூட்டிக்கொண் டிருந்தது.

பத்து வீடுகளை அவன் தாண்டி யிருப்பான். பால்ராஜும் வந்து சேர்ந்துகொண்டான். 'பால் கனி' யில் நின்றிருந்த குமார் தெருவிலே வரும் இருவரையும் பார்த்தான். அடுத்த கணம் மாடிப் படிகளி லிருந்து 'தடதட'வென்று இறங் கிக் கீழே வந்தான்.

''இதோ வந்துவிட்டேன் நிதார். ஒரு நிமிஷம் இருங்கள், என் தங்கத்தையும் கூட்டி வரு கிறேன்..'' என்று குமார் ஓடி ஞன். அடுத்த நிமிஷம் அழகான கன்றுக்குட்டி யொன்றை இழுத்து வந்தான். குமார் அதைக் குளிப் பாட்டி விரட்டி விட்டாளுனல் அது தாளுகவே வீட்டிற்கு வந்துவிடும்.

நண்பர்கள் மூவரும் ஆற்றுக்குக் கிளம்பினர். அரிசிலாற்றில் இந்த வருஷம் தண்ணீர் வற்ருமல் போய்க்கொண் டிருந்தது. காவிரித் தாயின் கிளைக்கரம்தானே அந்த அழகிய அரிசிலாறு! காரைக்காலில் ஏதேனும் விசேஷ நாட்களாக இருந்தால் ஆற்றில் நிறையத் தண்ணீர் விடுவார்கள். மழைக் காலங்களில் இருகரையும் தொட் டுக் கொண்டு புனல் பெருகிப் போகும். இப்போதும் சற்று அதிக மாகவே பிரவாகம் ஓடிக்கொண் டிருந்தது.

''குமார், தங்கத்தை துறைப் பக்கம் கொண்டுபோய்க் குளிப் பாட்டிவிட்டு வா, நாங்கள் மா மரத்து மடுப்பக்கம் போகிறேம். அங்கே நல்ல ஆழம்; ஆனந்த மாகக் குளிக்கலாம். தங்கத்தை விரட்டிவிட்டு அங்கே வந்து விடு!'' என்ருன் நிதார்.

''சரி'' என்ருன் குமார்.

நிதாரும் பால்ராஜும் இப் பொழுது மாமரத்து மடுப்பக்கம் நடந்தனர். அந்த இடத்தில் எப் பொழுதுமே நல்ல ஆழம் நிலைத் திருக்கும். அன்றியும் அங்கே மாமரமொன்று வளைந்து நின்றது. மாங்காய்கள் அனைத்தும் அங்கே குளிக்கும் சிறுவர்களைச் சேர்ந்தது தான். மாமரத்திற்குச் சற்று அப்பால் தாழம் புதர்கள் நிறைந் திருந்தன. அந்தப் பக்கம் நச்சுப் பாம்புகள் நெளிவதாகப் பலரும் பேசுவார்கள். எனவே அந்தப் பக்கம் ஆள் நடமாட்டம் அதிக மிருக்காது. ஆனாலும் இளம் உள்ளங்களில் தாளுகவே அச்சம் தலைதூக்குவதில்லை. பிறர்தான் அச்சமென்னும் வித்தை நெஞ்சிலே விதைத்து விடுகிருர்கள்.

நிதார் எதற்கும் அஞ்சாதவன். எதையும் துணிந்து செய்வதில் அவனுக்குப் பெருமகிழ்ச்சி. அவன் ஏழைச் சிறுவன்தான். செல்லம் கொடுத்து வளர்க்க அவனுக்கு யாரும் இல்லை. 'வாப்பா' மட்டும் இருக்கிருர். 'தயாரா கட்டை' அடித்துக் கொண்டு பாடுகிருர் களல்லவா பக்கிரிசாக்கள்? அந்த வேலைதான் அவருக்கு. ஊர்ப் பக்கிரிசாவாக இருந்த நிதாரின் தந்தைக்கு அந்த வேலைகளைக் கவனிப்பதிலேயே பொழுது போகும். மகனைக் கவனிக்க அந்த மனிதரால் முடியாது.

நான்கைந்து வருடங்களுக்கு முன்புதான் நிதாருக்கு ராஜ் நண்பளுகக் கிடைத்தான். பால்

ராஜ் கிறிஸ்துவச் சிறுவன். ஆனு லும் அன்போடு பழகினுன். அன் புணர்ச்சி களங்கமற்ற உள்ளங் களின் இணைப்பில் எழுவதுதானே! ராஜின் தந்தை பஸ் டிரைவராக வேலை பார்த்து வந்தார்.

நிதார் பள்ளியிலே படிப்பதற்கு உதவி வந்தவர் குமாரின் தந்தை யென்றுதான் சொல்ல வேண்டும். பணம் படைத்தவரான அவரது அருமை மகன் குமாரோடு நிதா ருக்குப் பழக்க மேற்பட்டது. அது முதல் குமாரின் வீட்டிற்கு நிதார் போய் வருவாள். கூடவே பால் ராஜும் செல்வான். அவன் தந்தை அன்போடு பேசுவார். அவன் அம்மாவும் தங்கையுங்கூட, பிரியத் தோடு பேசுவார்கள்.

நிதார், ராஜ், குமார் மூவரின் பழக்கமும் நட்பாக அரும்பியது. குமாரிடம் இயற்கையாகவே சற்றுப் பிடிவாத குணம் இருந்தது. என்ன இருந்தாலும் அவன் பணக்கார வீட்டுக் குழந்தையல்லவா? பிளவு ஏதும் நிகழ வொட்டாமல் நட் பைப் பேணினர் மூவரும்.

"குளிக்கலாமல்லவா?" என் ருன் ராஜ்.

"ராஜ், அதோ அந்த மரத்தைப் பார்! அழகான மாங்காய்கள். உனக்கு வேண்டுமா?"—நிதார் கேட்டான்.

"ஒன்று பறியேன்; தின்ன லாம்!" சொல்லும் போதே ராஜின் நாவிலே நீர் சுரந்தது. மெல்லச் சிரித்துக் கொண்டே நிதார் மரத்தில் ஏறினுன். பெரிய மாங்காய் ஒன்றைக் கையில் எடுத் துக் கொண்டு, ஆற்றில் சாய்ந் திருந்த மாமரக்கிளையில் வந்து உட்கார்ந்தான் நிதார். ராஜ் கழுத்தளவு நீரில் அருகே நின்றி ருந்தான். இப்போது நிதாரின் உடல் அழகாக இருந்தது. எந்த வருஷத்திலோ கையில் போட்டி ருந்த அம்மைத் தழும்புகூட இப் போது தெளிவாகத் தெரிந்தது. உருண்டு திரண்டிருந்தது அவன் உடம்பு. வட்டமான அந்த முகத் திலே அரும்பி நெளியும் மகிழ்ச்சி எத்தனை மாசற்றது!

"மாங்காயைப் பார்த்தாயா? நீயே சாப்பிடு இதை.." என்று நிதார் கையை நீட்டினுன் நீரில் நின்றிருந்த ராஜிடம். ஆற்றிலே நீரோட்டத்தோடு நீந்தி வரும் குமாரை அவன் பார்க்கவில்லை. ஆனந்தம் மேலிட நீரில் நெளிந்து வந்தான் குமார், நிதார் கையி லிருக்கும் மாங்காயைத் தான் வாங்கிவிட வேண்டும் என்ற வேகத்தோடு!

"இதை வாங்கிக் கொள்!" என்ருன் நிதார். ராஜின் கை நீண்டது.

"அது எனக்கு வேண்டும்!" என்ற குமாரின் குரல் கேட்டு நிதார் திரும்பினுன்.

"இல்லை, குமார்; இது பால் ராஜுக்குத்தான்!"

"எனக்குக் கொடுப்பாயா, மாட் டாயா?"

"ஊ..ஹூம்! ராஜுக்காகத் தான் பறித்தேன். அதை எப்படி உனக்குக் கொடுப்பது? உனக்கு வேண்டுமானுல் அப்புறம்..!"

மாங்காய் ராஜின் கைக்கு மாறியது. எப்போதும் போலவே அன்புப் புன்னகையை நிதார் விரித்தான். அந்த மென்னகை குமாரைக் கொன்றது! 'சே! ஒரு மாங்காயை ஆசையோடு கேட்டும் தர மறுத்துவிட்டானே, நிதார்! எத்தனை ஆணவம்! என் விருப் பத்தைப் புறக்கணித்துவிட் டானே! ராஜ் என்னைக் காட்டிலும் சிறந்தவனு?' பிஞ்சு நெஞ்சத் திற்கே உரிய இந்த எண்ணம் குமாரை ஆட்டியது. அவன் மகிழ்ச்சி மறைந்து விட்டது அந்த விநாடியிலேயே!

"குமார், இந்த மாங்காய் எனக்குமட்டுமில்லை; நம் மூவருக் குந்தான். நீயே உடைத்துப் பங் கிட்டுத் தா!" என்ருன் ராஜ்.

"பங்கு போடுவதற்கு என்னைத் தான் பார்த்தாயோ! நீங்களே தின்னுங்கள். பறித்தவனே தின் னட்டுமே!"—குமாரின் பேச்சிலே சீற்றம் கலந்திருந்தது. நிதாரின் முகம் கணத்தில் வாடியது.

கடைசிவரை அந்த மாங்காயைக் குமார் ஏன் திரும்பிப் பார்க் கிருன்?

அவன் நெஞ்சிலே நெருப்பாகப் புகைந்தது ஆத்திரம். நிதார்

ஏதும் புரியாமல் விழித்தான். பேசாமல் மூழ்கி மூழ்கிக் குளித்தான் குமார். வழக்கம்போல இன்று அவர்கள் பிடித்து விளையாட வில்லை. குளித்துவிட்டு வீடு திரும்பும்போது மூவருள்ளத்திலும் வெறுமையே நிலவியது. நிதாரின் சிரித்த வதனம்; ராஜின் நகை முகம்—இரண்டும் குமாரின் உள்ளத்தே உருவெடுத்தாடின. சுமையேறிய இதயத்தோடு வீட்டிற்குச் சென்ருன் குமார்.

2

"குமார்..!" போர்டிகோவில் நின்றிருந்த நிதார் குமாரைக் கூப்பிட்டான். பால்கனிப் பக்கம் குமாரைக் காணவில்லை.

"குமார்..குமார்!" கூப்பிட்டுக் கூப்பிட்டு நிதாருக்கு அலுத்துவிட்டது. 'இந்த நேரத்தில் குமார் எங்கும் போகமாட்டானே' என்று முணுமுணுத்துக்கொண் டிருந்தது அவன் வாய்.

"யாரது?" என்று கேட்டுக்கொண்டே கதவருகே வந்தாள் குமாரின் அம்மா.

"நிதாரா? உள்ளே வாயேன்" ஆசையோடு குமாரின் அன்னை அவனை அழைத்தாள்.

"குமார் வீட்டில் இல்லையா?"

"இங்கேதான் இருப்பான். மாடியில் இருக்கிருனே என்னவோ! கூப்பிடச் சொல்லட்டுமா?"

"அழைத்துப் பார்த்து விட்டேன். மாடியில் இல்லைபோல் தெரிகிறது."

"வெளியே போயிருப்பான்" என்று சொல்லிச் சென்ருள் தாய்.

இதைக் கேட்டுக்கொண் டிருந்த குமாரின் தங்கை மீனு அவனுடைய அறைக்குச் சென்று பார்த்தாள். அங்கே—

குமார் அசையாமல் உட்கார்ந்திருந்தான். இத்தனை கூப்பாடும் அவன் காதில் விழவில்லையா?

"அம்மா அழைத்தாளே, காதில் படவில்லையோ!" என்ருள் மீனு அவனிடம்.

"உன் வேலையைப் போய்ப் பார். கன்னம் சரியாகத்தானே இருக்கிறது?"

"டம்பப் பேச்செல்லாம் உன்னுடனே இருக்கட்டும்! நிதார் உன்னைக் கூப்பிடுகிருன். கீழே இறங்கி வா.."

"நான் இல்லை யென்று சொல்!"

"திருட்டு விழி விழித்துக் கொண்டு மாடியிலே உட்கார்ந்திருக்கிருன் என்று சொல்லட்டுமா?"

"சீ, என்ன திமிர் உனக்கு!"

"உனக்கு மட்டும் குறைவா?"

குமாரின் ஆத்திரம் பொங்கியது. இத்தனை நேரம் நிதாரும் அம்மாவும் கூப்பிட்டார்கள். அது குமாருக்குத் தெரியும். அவன் ஏன் பதில் பேசாமல் உட்கார்ந்து விட்டான்? கூப்பிட்ட குரலுக்குப் பதில் சொல்லாமல் இப்பொழுது கீழே இறங்கிப் போனால் அம்மா என்ன கேட்பாள்? அந்தத் தடியன் நிதார் தான் என்ன நினைப்பான்? அவன் சீற்றமெல்லாம் மீனுவின் மேல் தான் பாய்ந்தது. 'யார் எது வேண்டுமானாலும் நினைக்கட்டும். எனக்கென்ன கவலை?' என்று எண்ணியவாறு கீழே வந்தான் குமார்.

"தூங்கினுயா குமார்?"

"ஆமாம்.."

'இந்தச் சனியன் ஏன் இப்பொழுது வந்து உயிரை வாங்குகிருன்' என்று குமாரின் உள்ளம் பொருமியது. வெறுப்போடு அவனை முன்புறத்து ஹாலுக்கு இட்டுச் சென்ருன். நிதாரை ஒரு முறை நிமிர்ந்து பார்த்தான். அமைதியும் தண்மையும் அந்த வட்ட முகத்திலே ஒளிர்ந்தன. ஆனல் குமார்..? அவன் முகத்திலே சிவப்பல்லவா 'ஜிவ்'வென்று ஏறியிருக்கிறது?

"என்ன விஷயம்?" குமார் கேட்டான்.

"ஒன்றுமில்லை, குமார், உன்னிடம்.."

"ஒன்றுமில்லாமல் நீ இங்கே வரமாட்டாயே"

"இல்லை குமார்..படிப்பதற்குப்

புத்தகம் ஒன்று வாங்கிப் போகலாமென்று..''

'எப்போதும் இந்தத் தொல்லை தானு உனக்கு? காசு கொடுத்துப் புத்தகம் வாங்க வகையில்லாதவனெல்லாம் பள்ளிக்கூடத்திற்கு வந்து விடுகிறார்கள். ஓசி வாங்கியே காலத்தைக் கழித்து விடுகிறார்கள்!' குமார் இவ்வாறு தனக்குள் முனகினன்.

''குமார் ஒன்றே ஒன்று மட்டும், சமூகப் பாடப்புத்தகத்தைக் கொடுத்தால் போதும். நாளைக்கே கொடுத்து விடுகிறேன்..''

''அதை நான் படித்துக்கொண்டிருக்கிறேன்.''

''அப்படியானல் விஞ்ஞானப் புத்தகத்தை....''

''சாயந்தரம் அதைத்தான் படிக்கப் போகிறேன்!''

''ஆங்கிலத்தையாவது தருகிருயா?''

''வீணுகப் பேசாதே; நாளைக்கு நான் படிக்கப் போவது அதைத் தான்..''

நிதாரின் இதயம் சாம்பியது. கேட்கு முன்னரே புத்தகம் தரும் குமாரா இப்படிப் பேசுகிறான்? நிதாரின் மருண்ட உள்ளம் பேசியது:

''நான் போய் வருகிறேன் குமார்! ராஜிடம் வாங்கிக் கொள்கிறேன். அந்தியில் பனந்தோப்புப் படுகைப் பக்கம் வருவாயோ?''

''பார்க்கலாம்.''

நிதார் போய்விட்டான். குமாரின் உள்ளத்தே பெருமிதம் மெதுவாகத் தலை தூக்கியது. வஞ்சம் தீர்த்துவிட்டோம் என்ற மகிழ்ச்சி! அவன் உள்ளம் பேசியது:

''மாங்காய் கேட்டேன்; மறுத்து விட்டான். ராஜ் வாங்கிக்கொண்டான்; என் ஆசையை அழித்தான். இப்பொழுது அந்த நிதாரின் ஆசையை நான் அழித்து விட்டேன். மாங்காய் தந்திருந்தால் நானும் புத்தகம் கொடுத்திருப்பேனல்லவா?''

நிதார் போர்டிகோவிலிருந்து இறங்கினன். மீனு வந்தாள்.

''ஏன் அதற்குள் திரும்பிவிட்டாய், நிதார்?''

''சும்மாத்தான்.''

''விஷயத்தைச் சொல்லேன்.''

''எதுவுமில்லை மீனு?''

''ஒளிக்கிருயே, அவனிடம் என்ன கேட்டாய்?''

''படிப்பதற்குப் புத்தகம்..''

''இல்லை என்று சொல்லிவிட்டானு?''

நிதார் பதில் பேசவில்லை.

''ஒரு நிமிஷம் இரு, நிதார்!''

''ஏன்?''

''நான் எடுத்துத் தருகிறேன், புத்தகத்தை!''

''வேணும் மீனு. இப்பொழுது நான் படிக்கப் போவதில்லை!''

என்று சொல்லி வீட்டுக்குச் சென்ருன் நிதார்.

மீனு எவ்வளவு நல்லவள்! அண்ணனும் தங்கையும் இரு துருவங்களா? குமாரின் சீற்றத்திற்கு என்ன காரணம் என்று நிதாருக்கு விளங்கவில்லை.

3

அந்திப் பொழுது. செங்கதிர் வெம்மை தணிந்திருந்தது. தென்றல் உலாவிக்கொண் டிருந்தது. பொங்கி வரும் அரசிலாற்றுப் புனல் பொன்னிறம் பெற்றுப் பொலிந்தது. நிதாரும் ராஜும் பனந்தோப்பு மணல் மேட்டிலே அமர்ந்திருந்தனர். ஆற்றுப் புனலின் அலையசையை வெறித்துப் பார்த்துக்கொண் டிருந்தான் நிதார். இதயத்தை ஏதோ உறுத்திக்கொண் டிருந்தது. மூவரும் உட்கார்ந்து நேரம் போவது தெரியாமல் பேசிக்கொண் டிருப்பார்களே அந்த மணல் மேட்டில்! குமார் அருகில் இருந்தால் இப்படி நிலவுமா அமைதி? சுற்றுப்புறத்தை ஏறிட்டுப் பார்த்தான் நிதார். அக்கரையிலே அதோ தெரிகிறதே ஊர்! கிழக்குக் கோடியிலே அமைந்த பள்ளிவாசலின் வெள்ளை மனோராக்கள் எத்தனை பொலிவோடு விளங்குகின்றன! ஆற்றுக்குச் சமீபத்திலேயே நிற்கும் அந்தக் கோயில் கோபுரம் கலையின் விளக்கமாக வல்லவா இலங்குகிறது!

அக்கரை நெடுஞ்சாலையிலே வண்டிகள் வரிசை வரிசையாகப் போய்க்கொண் டிருந்தன. பூந்தோட்டத்தையும் கும்பகோணத்தையும் இணைக்கும் அழகான சாலை அது! தோப்பின் ஒரு

கோடியில் ஏழெட்டுக் குடிசைகள். குறவர்களின் குடிசைகள்தாம். நரிக்குறவர்களைப்போல் நாடோடிகள் அல்ல அவர்கள். ஐந்தாறு 'குறக் குளுவான்கள்' விளையாடிக் கொண்டிருந்தனர், ஒரு நாய்க் குட்டியோடு. எட்டத்தில் பனைஞ் சாரிகள் காற்றோடு இணைந்து ஒரு வித சத்தத்தை எழுப்பிக்கொண் டிருந்தன.

ஆழ்ந்த மோனத்தைக் கலைத் தான் ராஜ்.

''என்ன யோசனை, நிதார்?''

''ஒன்றுமில்லை ராஜ். நமது ஊர் எத்தனை இயற்கையழகோடு இருக்கிறது, பார்த்தாயா!''

''குமார் ஏன் இன்னும் வர வில்லை?''

''அவன் வரமாட்டான் என்று தான் முன்னமேயே சொன் னேனே! குளிக்கும் போதிருந்தே அவன் மனம் ஒரு மாதிரியாக வல்லவா இருந்தது? வீட்டுக்குப் போனபோது எத்தனை கோப மாகப் பேசினான், தெரியுமா?''

நிதாரின் குரலில் ஏக்கம் சூழ்ந் திருந்தது.

''இன்றைக்கு வராவிட்டாலும் நாளைக்காவது குமார் வருவான். நாம் சாப்பிடலாமா?'' என்றவாறு கையிலிருந்த பொட்டலத்தைப் பிரித்தான் ராஜ்.

ஏழெட்டு 'பிஸ்கட்'டும் இரண்டு ஆரஞ்சுப் பழமும் அந்தக் காகித மடிப்பிலே இருந்தது. திறந்து வைத்தான் ராஜ். அவன் என்ன சொல்லியும் நிவார் தின்ன மறுத் தான். கடைசியில் ராஜின் பிடி வாதத்தின்மேல் கொஞ்சம் எடுத் துக் கொண்டான்.

நாய்க்குட்டி குரைத்துக் கொண்டே ஓடிவந்தது. அதைத் தொடர்ந்து 'குஞ்சுக் குறவர்' களும் ஓடிவந்தனர். பாழாய்ப் போன நாய்க்குட்டி அவர்கள் அருகிலா வந்து நிற்க வேண்டும்? அந்தச் சிறுவர்களும் அங்கே வந்து விட்டனர். அந்தப் பொடியர் களின் பார்வை பொட்டலத்தில் நின்றது. நிதாரின் பார்வை அவர்களின்மீது பதிந்தது. ராஜைப் பார்த்தான் நிதார்.

''கொடுத்து விடட்டுமா?' என் றான் ராஜ்.

''அப்படியே செய்!'' என்றான் நிதார்.

எஞ்சியிருந்ததைச் சிறுவர்க ளிடம் தூக்கிக் கொடுத்தான் ராஜ்.

''குமார் இன்னும் ஏன் வர வில்லை?''

''அதுதான் எனக்கும் தெரிய வில்லை, நிதார்!''

''ஒரு வேளை அந்த மாங்காய் விஷயமாக இருக்குமோ, ராஜ்?''

''இருந்தாலும் இருக்கும். அவன்தான் பிடிவாதக்காரனா யிற்றே!''

நேரம் ஓடிக்கொண் டிருந்தது. மஞ்சள் வெயில் மறைந்துவிட் டது. குளிர்ந்த காற்று நெளிந்தது பனந்தோப்பில். சினிமாக்கொட் டகை 'டிரம்' ஓசை ஒலித்துக் கொண்டிருந்தது. மாதா கோயில் மணி ஒலித்தது. பள்ளிவாசல் 'பாங்கோசை' கேட்டது. கோயி லிலே பூஜை மணி கிணுகிணுத்தது.

நிதாரும் ராஜும் ஆற்றங் கரைப் புல்தரையிலே நடந்து கொண்டிருந்தனர்.

4

அடுத்த நாள். நிதாரும் ராஜும் குளிக்கக் கிளம்பியபோது குமார் வீட்டில் இல்லை. மாமரத்து மடுவின் பக்கம் அவர்கள் வந்த போது அவர்களுக்கு வியப்பே ஏற்பட்டது. குமார்தான் குளித் துக்கொண் டிருந்தான்.

''முன்பே வந்து விட்டாயா, குமார்?'' என்றான் நிதார்.

குமார் மௌனமாக இருந்தான்.

''மாங்காய் வேண்டுமா?'' ராஜ் கேட்டான்.

''வேண்டாம்.''

''ஒன்று மட்டும் பறித்துத் தரு கிறேன்.'' நிதார் சொன்னான்.

''ஆசையாக இருந்தால் பறித் துத் தின்ன வேண்டியதுதானே! அதற்கு என்னை ஏன் கேட் கிறாய்?''

''கோபிக்காதே குமார்! ஒரு நிமிஷத்தில்..''

நிதார் மரத்தில் ஏறினான்.

ஏறும்போதே சறுக்கிவிட்டது. மரத்தில் பாதித் தூரம் ஏறிவிட்டான் நிதார். தாழம்பூ மணத்தது. பக்கத்துப் புதர்களில் மடல விழ்ந்த பூவின் நறுமணம் அது. ராஜும் குமாரும் மடுவில் நின்றிருந்தனர். குமார் பேசிய ஒன்றிரண்டு வார்த்தையும் ராஜுக்கு எத்தனையோ ஆறுதலை அளித்தன.

நிதார் இடது கையால் ஒரு கிளையைப் பிடித்துக்கொண்டான். வலக்கரம் பெரிய மாங்காயொன்றைத் திருகியது அப்போது.

மரத்திலே அவன் கையிலிருந்த கிளையிலே சலசலப்பு! இலைகள் அசைந்தன. ஏதோ ஊர்ந்து வருவது போன்ற ஒலி.

அடுத்த விநாடி.

'சுருக்'கென்று ஏதோ அவன் கையைக் கொத்திப் பிடுங்கியது. அவன் கை கிளையின் பிடிப்பினின்றும் நழுவியது.

''ஆ..அல்லா!'' கூக்குரல் அதிர்ந்தது.

ஆற்று நீர் இரண்டாகப் பிளக்க நிதார் விழுந்தான். நீரோட்டம் அவனை இழுத்துச் சென்றது. நிதார் ஏன் ஓலமிட வேண்டும்? மரத்தை நோக்கினான் குமார். அடுத்தகணம் அவனும் கூச்சலிட்டான்.

''ராஜ், அதோ பார்! அந்தக் கிளையில்..!''

''பாம்பு!.. பா..ம்..பு!!''— ராஜ் திணறினான். அந்தக் கிளையில் நச்சுப் பாம்பொன்றுதான் சுற்றிக் கொண்டிருந்தது. 'பாம்புதான் நிதாரைத் தீண்டிவிட்டதோ? அதனால்தான் அவன் ஓலமிட்டு ஆற்றில் விழுந்தானோ!'

ஒரு நொடியில் எல்லாம் நடந்து விட்டது.

ராஜின் உள்ளம் படபடத்தது. நிதாரின் தலைமட்டுமே நீர்மட்டத்தில் தெரிந்தது. நீரைக் கிழித்துக் கொண்டு ராஜ் பாய்ந்தான் நிதாரை நோக்கி. ஒரு நிமிஷங் கூட ஆகவில்லை. நிதாரின் தலையைப் பற்றிக் கொண்டான் ராஜ். திணறியவாறு எப்படியோ கரைக்கு இழுத்து வந்துவிட்டான் நிதாரை. குமாரும் பரபரப்போடு நின்றிருந்தான். நிதாரின் இடது கையைப் பார்த்தனர் இருவரும்.

அங்கே, கத்தியால் கீறினாற் போல்—முள்ளால் குத்திக் கிழித்தாற்போல்—தோல் பெயர்ந்திருந்தது. ரத்தக் கசிவு மட்டும் லேசாக இருந்தது. ராஜ் சோர்ந்து போய் விட்டான்.

''குமார்!''

''ஏன்?''

''பாம்பு தீண்டிவிட்டது போலிருக்கிறது, விஷம் பரவுவதற்குள்..!''

''தூக்கிப் போய்விடுவோம், கிளம்பு!'' குமார் பரபரப்போடு பேசினான். ராஜ் நிதாரைத்தூக்கிக் கொண்டான் ஈரத்துணியோடு. குமார் பின்தொடர்ந்தான். அவனைப் பீதி கலக்கியது. நிதாரைப் பாம்பு கடித்துவிட்டது. அவன் பிழைப்பானா? நிதார் பிழைக்காவிட்டால்..? ஒரு நண்பனை அவன் இழக்க..! குமாரால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

5

போர்டிகோவை அடுத்த வேப்ப மரத்தடியில்—சிமெண்டுப் பெஞ்சியில் நிதார் படுத்திருந்தான். இல்லை, அவன் உடல்தான் கவலையற்று அங்கே கிடக்கிறதா? குமாரின் தந்தை பதறினார். அவன் தாய் வருந்தினாள். மீனாவும் விம்மினாள்.

''குமார், சீக்கிரம் ஓடு! டாக்டரைக் கூட்டி வா..!'' அவர் துடியாய்த் துடித்தார். நஞ்சு உடல் முழுதும் பரவிவிட்டால் பிழைப்பது அரிதுதானே! நச்சுப் பாம்பு தீண்டிவிட்டால் பிழைப்பது எளிதா?

''ஸார், குமார் டாக்டரைப் பார்க்கட்டும். நான் அங்கே போகிறேன்; 'ஹகீம்' சாஹிபைக் கூப்பிட்டு வருகிறேன். அவர் வந்தால் நல்லபடியாக ஏதேனும் நடக்கும்....''—ராஜ் ஓடினான்.

'ஹகீம்' சாஹிப் அந்த ஊரிலே பிரசித்தி பெற்றவர். நல்ல நாட்டு



பேரன்: போ தாத்தா! உன்னோடே பஜாருக்கு வர எனக்கு வெக்கமா இருக்கு.

தாத்தா: ! ! !........

வைத்திய முறைகளைத் தெரிந்தவர். எங்கோ மலையாளத்து மூலையிலே பிறந்தவர் அவர். நாடோடியாக நாடுகள் பலவற்றையும் சுற்றிப் பார்த்தவர். என்ன காரணத்தினாலோ வயதான காலத்தில் இந்த ஊரிலேயே தங்கிவிட்டார். ஊரில் எல்லோரும் அவரை அறிவார்கள். யார் எந்த நேரத்தில் அழைத்தாலும் முகம் கோணாமல் வந்து சிகிச்சை செய்வார். எத்தனையோ பயங்கரமான நிலையிலிருந்த 'கேஸ்'களையும் தம் மருத்துவத்தால் சரி செய்திருக்கிறார். ஆண்டவனிடம் அளவற்ற பக்தியுள்ளவர்.

குமார் திரும்பி வந்தான்.

''டாக்டர் எங்கே?''—அவன் தந்தை கேட்டார்.

''அவர் வரவில்லை. வேறெங்கேயோ போகிறார்!''

''இந்தக் காலத்து டாக்டர்களே இப்படித்தானே!'' அவர் சபித்துக் கொண்டிருந்தார்.

நிமிடங்கள் ஓடின. ''கடவுளே, நிதாரைக் காப்பாற்று!'' குமாரின் இதயந்தான் கேட்கிறதா?

''அப்பா, அதோ ராஜ்! 'பாய்' கூடவே வருகிறார்!''—குமார் மகிழ்ச்சியோடு கூறினான்.

''பிஸ்மில்லாஹ்!''—ஹகீம் சாஹிப் வந்தார். ராஜ் துடிக்கும் இதயத்தோடு நின்றான். நிதாரைக் கவனித்தார் வைத்தியர். தம் பெட்டியிலிருந்து ஏதோ மருந்தை எடுத்தார். இடது கையில் கடிவாய்க்கருகே மருந்தை வைத்துத் தேய்த்தார். அவர் வாய் முணுமுணுத்துக்கொண்டிருந்தது. அமைதி சூழ்ந்திருந்தது.

''எப்படி பாய், இருக்கிறது?'' என்றார் குமாரின் தந்தை.

''பொறுங்கள். அல்லா(ஹ்)வின் நாட்டப்படி எல்லாம் நடக்கும். அவர் காப்பாற்றுவார்.''

ஹகீமின் பதில் குமாருக்கும், ராஜுக்கும் ஆறுதலாக இருந்தது. குமாரின் கவனம், ராஜின் பார்வை எல்லாம் நிதாரின் முகத்தில்தான் பதிந்திருந்தது. பாவம்! நிதாரின் 'வாப்பா' கூட ஊரில் இல்லை.

நிதாரின் மூக்கருகே கையை வைத்துப் பார்த்தார் சாஹிப். அவர் முகத்திலும் தெளிவு பிறந்தது. நிதாரின் உடலிலே சிறு அசைவு ஏற்பட்டதை ராஜும் குமாரும் கண்டனர்.

விநாடிகளின் அசைவில்....

நிதாரின் கண்ணிமைகள் மெதுவாக விலகின. அவன் விழித்தான்!

சுற்று முற்றும் அவன் பார்வை விரிந்தது. அப்படியானால் அவன்..? பிழைத்து விட்டானா? ஹகீமின் சிகிச்சை பலனளித்து விட்டதா? ராஜின் இதயம் மகிழ அவன் எழுந்து விடுவானா? குமாரின் மனம் குதூகலிக்க நிதார் குணமடைந்து விடுவானா?

''இனிமேல் பயப்படவேண்டியதில்லை. நஞ்சு முறிந்துவிட்டது. ஆண்டவனின் அருள்தான் எல்லாம்....!''— பெருமிதத்தோடு ஹகீம் பேசினார். பால்ராஜ், குமார், நிதார்—மூவர் விழிகளும் கலந்தன. அந்தக் கண்கள் என்ன பேசிக்கொள்கின்றன? பச்சை மாங்காயால் ஏற்பட்ட சிறு பிளவு நீர்ப் பிளவாகி விட்டது என்பதையா? அல்லது, 'நாங்கள் ஒரு கிளைப் பறவைகள், இனிமேல் என்றென்றைக்கும் பிரியவே மாட்டோம்' என்பதையா? அந்த நெஞ்சங்களிலே அமைதி ஏற்பட்டு விட்டது!

12. அதிசயத் திருட்டு!

ஸப் இன்ஸ்பெக்டர் பட்டாபியும், ஹெட்கான்ஸ்டபிள் சாமிக்கண்ணுவும மிதிலா விலாஸுக்கு வந்தனர். பட்டாபி அதுவரை கண்டிராத ஆச்சரியத்தை அடைந்தார். ஏனெனில் திருட்டே ஓர் அதிசயமாக இருந்தது! 'ஒரு பெரிய இரும்புப் பெட்டியே காணுமல் போய் விட்டதாம். அதுவும் இரும்புப்பெட்டி தனியாக ஓர் அறையில் பூட்டி வைக்கப் பட்டிருந்ததாம். பூட்டை உடைக்கவில்லை. கதவைப் பெயர்க்கவில்லை. சர்வ சாதாரணமாகப் பூட்டைத் திறந்துகொண்டு இரும்புப் பெட்டியை அப்புறப் படுத்தியிருக்கிருர்கள் திருடர்கள். அந்த வீட்டில் அன்று வீட்டு வேலைக்காரனைத் தவிர மற்ற எல்லோரும் சினிமாவுக்குப் போய் இருந்தார்களாம். வீட்டு வேலைக்காரன் தூங்கிவிட்டான் நன்ருக. வந்தவர்களுக்கு லகுவாக வேலை முடிந்து விட்டது.' இப்படித்தான் பேசிக்கொண்டார்கள் எல்லோரும். பட்டாபிக்கு நினைக்க நினைக்க ஆச்சரியமாக இருந்தது. 'இரும்புப் பெட்டியை அவ்வளவு சீக்கிரம் எப்படி அப்புறப் படுத்திஞர்கள்?...அறைச் சாவி அவர்களுக்கு ஏது? முதலில் அவ்வளவு உயரமான மாடிக்கு அவன் எப்படி ஏறி வந்தான்? இரும்புப்பெட்டிக்கும் அவர்களிடம் சாவி இருந்திருக்க வேண்டும். அவர்களுக்கு அது எப்படிக் கிடைத்தது? அந்த இடத்தில் திருடன் வந்த சுவடே தெரியவில்லை. ஏதோ மாயமாக எல்லாம் மறைந்து விட்டனவை போலிருந்தன. பட்டாபிக்கு யோசனை ஓடிக்கொண்டிருந்தது. விநாயகம் அன்று காலையில், அந்தக் கறுப்புக் கண்ணாடிதான் மிதிலா விலாஸில் கொள்ளையடித்தான்' என்று சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. அது ஓரளவு உண்மையாகவும் இருக்கலாம் என்றும் தோன்றியது. உடனேயே அவருக்குத் திருவல்லிக்கேணி சென்று அந்த ஆட்களைப் பார்வையிட வேண்டும் என்று ஆசை ஏற்பட்டுவிட்டது. கடைசியாக அந்த அறையை ஒரு நோட்டம் விட்டார் அவர். கதவுகளில் கைவிரல்கள் பதிந்திருக்கும் என்று நம்பி லென்சு மூலம் பரிசோதனை செய்து பார்த்தார் ஹெட்கான்ஸ்டபிள். அதுவும் பயன் அளிக்கவில்லை. ஏனெனில் கைரேகைகளே அந்தக் கதவில் படிந்திருக்கவில்லை. முதலில் அந்த அறைக்கு மாடி ஏறி எப்படி வந்தான்? மாடிக் கதவு பூட்டிய படி இருக்கிறதே; எல்லாம் ஒரே ஆச்சரியந்தான்!

பட்டாபியும் ஹெட்கான்ஸ்டபிள் சாமிக்கண்ணும் அங்கிருந்து விடைபெற்றுக் கொண்டார்கள். திருவல்லிக்கேணியை நோக்கி சைக்கிள் இரண்டும் பறந்தன.

* * *

எதிராஜ் அறையை விட்

பரிசுபெற்ற தொடர்கதை:

டுக் கோபத்துடன் வெளியேறினன் அல்லவா? அவன் நேராகத் தெருவில் நடந்தான். தெருக்கோடியில் அதே சமயம் ஸம்பத்தும் ஸ்ரீதரனும் வந்துகொண் டிருந்தார்கள். அவர்கள்தான் முதல் நாள் இரவு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் என்று அவனுக்குத் தெரிந்துவிட்டது. அவனுக்குச் சொல்ல முடியாத கோபம். அந்தக் கோபத்தில் அவனுடைய முகம் பயங்கரமாக மாறிவிட்டது. கையில் ஸிகரெட் ஒன்றை அழகாகப் பிடித்துப் புகையை விட்டுக்கொண்டு வந்துகொண் டிருந்த அந்தக் 'கறுப்புக் கண்ணுடி'யைப் பார்க்க ஆச்சரியமாகத்தான் இருந்தது. நெருங்கி வந்துகொண் டிருந்தான் அவன். ஸம்பத்திற்கு அவனை எப்படியாகிலும் ஒரு கேள்வி கேட்டுப் பதில் வாங்க வேண்டும் என்று ஆசை. அவன் அருகில் வந்தான்.

''ஸார்! மணி என்ன ஆகிறது?'' என்று கேட்டான் ஸம்பத். புன்னகையுடன் நின்றுன் எதிராஜ்.

''கரெக்டா, டென் தர்டி.... உம்.. 'பிக் ஸ்டீரீட்'டுக்கு எப்படிப் போக வேண்டும்?''

''இங்கிருந்து ரொம்பத் தூரம் ஆயிற்றே அது! கிட்டத்தட்ட ஒரு மைல் இருக்கும்.''

எதிராஜ் பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து, ''இந்த அட்ரஸைப் பார்த்து வீட்டின் அடையாளம் சொல்லுவீங்களா?'' என்று அந்தக் கடிதத்தை நீட்டினுன்.

ஸ்ரீதரன், ஸம்பத் இருவருமே அதை வாங்கிப் பார்த்தார்கள். கடிதத்தில் ஒரு விலாசம் இருந்தது உண்மை. ஆனுல் விலாசத்தின் மேல் கிழிந்திருந்தது. பாதி எழுத்துக்களே தெரிந்தன. அதிலே, 'இரவு எட்டரை மணிக்கு வந்துவிடு. விலாசம் கீழே..!' என்று நன்ருகத் தெளிவாக எழுதியிருந்தது.

''இந்த விலாசம், 'பிக்ஸ் டிரீட்' கடைசியில் இருக்கிறது, பைக்ராப்ட்ஸ் ரோடு. சேரும் இடத்தில்.''

''ஓ..தாங்க் யூ..'' என்றுன் அவன். மறுநிமிஷம் நகர்ந்து

விட்டான். ஸம்பத்தும் ஸ்ரீதரனும் எதிர்ப்புறம் நகர்ந்தார்கள். கொஞ்ச தூரம் நகர்ந்ததும், ஸ்ரீதரன், ''ஸம்பத்! என்ன இது?..'' என்றான்.

''ஒன்றுமில்லை.. வேண்டுமென்றுதான் கேட்டேன். அவன் குரலைக் கேட்கவேண்டுமென்று ஆசை..'' என்றான் ஸம்பத்.

''அந்தக் கடிதாசில்..பார்க்கவில்லை?''

''பார்த்தேனே....விலாசம் தானே?''

''ஞாபகத்தில் வைத்துக்கொள் அதை. மேலே எழுதியிருந்ததைக் கவனிக்கவில்லையா? 'எட்டரை மணிக்கு'....''

''ஆமாம், பார்த்தேன். அது என்ன என்று சொல்கிறாய்?....இரவு திருட்டு நடக்கப்போகிறது என்று நினைக்கிறாயா?''

''ஆமாம்.....வேறே என்ன?....'' என்றான் ஸ்ரீதரன்.

''ரொம்ப சரி; நானும் அப்படித்தான் நினைத்திருப்பேன், சற்றுமுன்னால் ஒரு விஷயத்தைக் கவனிக்காவிட்டால். இருவரும் ஏமாந்து போயிருப்போம். அப்புறம் என்னவோ?''

''என்ன சொல்கிறாய், ஸம்பத்?''

''அவன்தான் ஏமாந்துபோகப் போகிறான் இப்போது. அந்தக் கடிதம் அவன் வேண்டுமென்றே தயாரித்தது. அதை நம்பிக் கொண்டு நாம் போனால் மாட்டிக்





வந்தவர்: என்னங்க, குழந்தைகளுக்கெல்லாம் மொட்டை அடிச்சுட்டீங்க? பழனிக்குப் போயிருந்தீங்களா?

வீட்டுக்காரர்: அதில்லீங்க! எண்ணெய் விலையெல்லாம் ஏகமாகக் கூடிப்போயிடுச்சே! படி நாலரை ரூபாய் சொல்றானே! அதான்! —பி. கே. சாமி.

கொள்ள வேண்டியதுதான்.... புரிந்ததா?....''

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?''

''நாம் இருவரும் அவனுடைய விரோதிகள் என்று அவனுக்கு நன்றாகத் தெரியும். சற்று முன்னால் ஹோட்டலில் அந்த ஆள் நாம் பேசுவதைப் பின்னாலிருந்து கவனித்துக்கொண்டிருந்தான்.. ..இரு..இரு..அதோ! பார், ஸம்பத்!'' கறுப்புக் கண்ணாடியின் பங்களாவிலிருந்து வெளியே வந்துகொண்டிருந்த ஓர் ஆளைச் சுட்டிக் காண்பித்தான். அதே 'கறுப்புக் கண்ணாடி' ஆள்தான். அவன்! அவன் எதற்கு சுற்றிக்கொண்டு மறுபடியும் எதிரில் வருகிறான்?'

''ஸ்ரீதரன்! கறுப்புக் கண்ணாடி தானே?' என்று தாழ்ந்த குரலில் கேட்டான்.

''ஆமாம்?..அவன் இப்பொழுது தானே இந்தப் பக்கம் போனான்? மறுபடி எப்படிச் சுற்றிக்கொண்டு வருகிறான்?''

''ஆமாம்; இப்படித்தானே போனான்?''

''என்ன ஆச்சரியமாக இருக்கிறதே!''

''எனக்கும் புரியவில்லை?'' இப்படிப் போனவன் எதிர்ப் பக்கம் எப்படி வந்தான்?''

'ஆமாம்! அவனேதான் வந்துகொண்டிருந்தான் எதிர்த்தாற்போல்! 'மறுபடியும் தங்களை நோக்கி எதற்காக வருகிறான்?' என்று இருவருக்கும் புரியவில்லை. ஸம்பத்திற்கு அவனுடையகறுப்புக் கண்ணாடியைப் பார்க்கப் பார்க்க எரிச்சலாக இருந்தது ஓங்கி ஒரு குத்துவிட்டு, கறுப்புக் கண்ணாடியை உடைத்தெறிந்தால் என்ன என்று தோன்றியது அவனுக்கு. இதோ! அவன் தாண்டிப் போகிறான். அப்பொழுது பேசியவன் இப்பொழுது ஏன் இப்படி முறைத்துக் கொண்டு போகிறான்?' ஸம்பத்தும் ஸ்ரீதரனும், ஒருவரையொருவர் அர்த்த புஷ்டியுடன் சிரித்துக் கொண்டார்கள். அவன் போனதும், ''ஸம்பத்! அவன் எப்படி சுற்றிக்கொண்டு வந்தான்?..''

''ஏதோ வழி இருக்கிறது போலிருக்கிறது.''

'வழி இருக்கிறது என்று நமக்குத் தெரியப்படுத்தவா அப்படிச் செய்கிறான்?''

''ஒன்றுமே புரியவில்லை?....''

அவர்கள் பேசிக்கொண்டே அந்தக் 'கறுப்புக் கண்ணாடி' பங்களாவின் வாசலில் வந்து நின்றார்கள்.

ஸம்பத் மாடி ஜன்னலைப் பார்த்தான். கடைக் கண்ணால் உள்ளே யாராவது இருக்கிறார்களா என்று ஊடுருவிப் பார்த்தது அவன் பார்வை.

அங்கே—

மாடி ஜன்னலில் ஒரு நிமிஷம் அந்தப் பெண் வந்து நின்றாள். ஜன்னல் கம்பியைப் பிடித்துக் கொண்டு நின்ற அவள் ஸம்பத்தையும் ஸ்ரீதரனையும் பார்த்தாள். அவளைப் பார்த்த ஸம்பத் திடுக்கிட்டுப் போனான். ஏன் அவள் முகம் அப்படி வெளிறிப் போய் இருந்தது? ஏன் அவள் முகம் அப்படிப் பயங்கரமாக இருக்கிறது? ஏன் அவள் கண்கள் கலங்கியிருக்கின்றன? அவள் ஏதோ

சொல்ல விரும்புகிறாளா அல்லது அது பைத்தியத்தின் சேஷ்டையா? அவள் ஏன் அப்படி மிரள மிரள விழிக்கிறாள்?' ஸம்பத்திற்கு மனசு என்னவோ செய்தது ஆ கா! அந்தப் பயங்கர மனிதன் அவளைப் பயமுறுத்தி விட்டானோ?.. அடித்துத் தொந்தரவு செய்து விட்டானோ?.. ஈவிரக்கமில்லாத அந்த அரக்கன் கையில் அவள் ஏன் அப்படிக் கஷ்டப்படவேண்டும்?.. முதலில் அவளை விடுதலை செய்தாக வேண்டும். என்ன ஆனாலும் சரி.. ஸம்பத்தின் உடலெல்லாம் பதறியது... ஸ்ரீதரனுடன் சுப்புவின் வீட்டு வாசல் திண்ணையில் போய் அமர்ந்தான்.

* * *

மயக்க நிலையிலிருந்த சுப்பு இரவு முழுவதும் உளறிக்கொண்டிருந்தான். காலையில்தான் நல்ல நிலைமைக்கு வந்தான். அவனுடைய தகப்பனார் இரவு முழுவதும் இதே கவலையினால் தூங்கவில்லை. காலையில் சுப்பு கண் விழித்ததும் தான் அவருக்கு உயிர் வந்தது.

''டேய்! சுப்பு..சுப்பு.. என்னடா?..என்ன அப்படி விழுந்தே, சொல்லுடா?..'' என்றார் அவர். சுப்பு வெகு நேரம் பேசவில்லை. சாதாரணமாகவே அவன் பேசுவது உளறலாக இருக்கும். பேசி முடித்துவிட்டான் என்று நினைத்த பொழுதுதான் அவன் பேச ஆரம்பித்திருப்பான். பயத்தில் நடுக்கம் இன்னும் ஓயவில்லை. வெகுநேரம் கேட்ட பிறகுதான் கொஞ்சம் பதில் சொன்னான். ஆனால் அப்பொழுதும் அவன் உண்மையைச் சொல்லவில்லை. ஏதோ பேயைக் கண்டு பயந்து விட்டதாகப் புளுகினான். அவன் தந்தை அதை நம்பவில்லைதான். ஆனால் அதை அசிரத்தையாக அவர் விட்டு விட்டார். அவருக்கு இப்பொழுது கவலை அதிகமாகி விட்டது. அசட்டுத்தனத்தில் மாட்டிக்கொள்ளப் போகிறானே என்றுதான் கவலை. கடைசியாக ஒரு தீர்மானத்திற்கு வந்தார். 'இனிமேல் சுப்புவை வெளியிலேயே அனுப்பக்கூடாது. அடுத்த வீட்டு ஆட்களுடன் சேர

தந்தை: புத்தகத்தைக் கிழிக்காமல், பாழாக்காமல் பத்திரமாக வைத்துக்கொள்ள வேண்டும்; தெரிகிறதா?

மகன்: ஓ! கடைசிவரைக்கும் கை படாமல் அப்படியே வைத்திருப்பேன் அப்பா!

—பி. கே. சாமி, தூத்துக்குடி.

விடக்கூடாது.' இந்த விதமாக எல்லாம் அவர் தீர்மானம் செய்து வைத்திருந்தார் அதே சமயத்தில் ஒவ்வொரு கணமும் அடுத்த வீட்டில் என்ன நடக்கிறது என்று கவனித்துக்கொண்டிருந்தார். முதல் நாள் இரவு கேட்ட துப்பாக்கிச் சத்தம் எப்படி உண்டாயிற்று என்று அவரால் ஊகிக்க முடியவில்லை. காலை பத்தரை மணி சுமாருக்கு அவர் தற்செயலாக வாசல் பக்கம் வந்தபொழுது அவருக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. வாசல் திண்ணையில் ஸ்ரீதரனும் ஸம்பத்தும் உட்கார்ந்திருந்தார்கள்.

''சுப்பு எங்கே?'' என்று கேட்டான் ஸம்பத்.

''சுப்புவா? இங்கே வந்து பாரு அவன் இருக்கிறதை....'' என்றார் அவர்.

ஸ்ரீதரனும் ஸம்பத்தும் உள்ளே போனார்கள். இருவரும் திடுக்கிட்டார்கள். சுப்பு கண் விழிக்காமல் கிடந்தான்

(தொடரும்)



"இது என்ன கூத்து!"

கே. சுந்தரேசன்

சோணாசலத்துக்குத் தூக்கம் வரவில்லை. கண்களை மூடிக்கொண்டு மனம் என்னும் குரங்கை அலைய விட்டவாறு படுத்திருந்தான்.

பொழுது விடிந்தால் ரிஸல்ட் வந்துவிடும். வந்து விட்டால்?-

அவனுக்குத் தன் ரிஸல்ட் தெரிந்ததுதான்.

கேள்வித்தாள்கள் எல்லாமே வெகு சுலபம். விறு விறுவென்று மகிழ்ச்சி பொங்கத்தான் எழுதி முடித்தான். தெரியாத ஓரிரு கேள்விகளுக்கும் கழுத்தை முறித்து, வளைத்து, காப்பியடித்து வெளுத்துக் கட்டிவிட்டான்.

''டேய், சோணு! பரீட்சை எப்படி?'' என்று கேட்டவர்களுக்கு, ''எல்லாமே வெகு சுலபம்! கொன்னுப்புட்டேன். கொன்னு— எதை எதை நினைச்சேனோ அதெல்லாம் அப்படியே வந்துட்டுது!'' என்றான். ஆனால் அந்தக் குண்டுக் கிட்டா அவனை இந்த ஒரு கேள்வியோடு விட்டுப் போகவில்லை. தினம் பரீட்சை முடிந்ததும் ஒவ்வொரு கேள்விக்கும், ''என்னடா விடை எழுதியிருக்கே?'' என்று கேட்க ஆரம்பித்தான்.

''ஐயே! முதல் கணக்குக்கு ஏழுதான் கரெக்ட். எழுபத்தேழு தப்பு. நீ போட்ட கணக்கு அவ்வளவும் தப்பு—''

''டேய்...மண்டு...மண்டு...இந்தியாவுக்கு 1937-இலேயா சுதந்தரம் வந்தது? தப்பு..தப்பு'' என்று அவன் எழுதிய விடைகளைச் சரி பார்த்துவிட்டு, ''போடா..போ.. நீ இந்த வருஷமும் கோட்டுதான்!'' என்று அவனுடைய சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்திவிட்டு ஓடிவிட்டான் அவன்.

பொழுது விடிந்தால்? குண்டுக் கிட்டா சொன்னபடி, 'கோட்' என்று தெரிந்தால்—? அவன் அப்பா மகாதேவன் கையில் பிரம்பேந்திப் பிரசன்னமாவார். பிறகு ஒரு பெரிய கூத்து! மேஜை மீதிருந்த அவனுடைய கதைகள் எல்லாம் மூலைக்கு ஒன்றாகப் பறக்கும்! அவன்மீது வரும் கோபத்தைவிட அவன் கஷ்டப்பட்டு எழுதிய கதைகளைக் கண்டால் அவர் கோபம் எல்லை கடந்துவிடும். ஏனென்றால் அவன் கதை எழுத ஆரம்பித்தது முதல்தான் அவன் குட்டிச்சுவராகி விட்டான் என்பது அவர் எண்ணம். இது மட்டுமா? ''கழுதை, சனியன், சோறு தண்ணீர் கிடையாது!'' என்ற வசைமாரியுடன் முதுகிலே தாளங்கள் 'படபட' வென ஒலிக்கும்.

அவன்தான் என்ன செய்ய முடியும்? அவனுக்குக் கதை எழுதுவதில் ஆர்வம் அதிகம். கணக்குப் பரீட்சையன்றுதான் அவன் மனத்திலே 'காப்பியடிக்கும் கலை' யைப் பற்றிக் கற்பனை ஊற்றெடுத்தது.

பிருதிவி ராஜைப் பற்றிப் படிக்கும்போதுதானே அவன் மனத்

திரையில் பிரதீப் குமார் கையிலே வாளுடன் காட்சி அளித்துப் பல தீரச் செயல்கள் புரிகிருன்!

கற்பனை தோன்றும் போது அதைத் தீட்டிப் பத்திரிகைக்கு அனுப்பிவைப்பான்.

கற்பனை தோன்றும் போது எழுதினுல்தானே எழுத முடியும்? அதை விட்டுவிட்டு அப்பா சொல்படி கணக்கைப் போட்டு மூளையைக் குழப்பிக்கொண் டிருந்தால், தோன்றிய கற்பனை என்னுவது?

பார்வையைத் திருப்பினுன். அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது. நூற்றிப்பதினென்ருவது தடவையாக அவன் எழுதிய சரித்திரக்கதை உட்பட, சென்னையைத் தரிசித்துவிட்டுத் திரும்பி வந்த அத்தனை கதைகளும் மேஜைமீது கிடந்தன.

'பஜ்ஜி' பத்திரிகைக்கு அனுப்பித் திரும்பிய 'பரிதாபம்' என்ற கதை மூலைக்கு ஒரு பக்கமாகப் பரிதாபமாகக் கிடந்த காட்சி யாரையும் உருக்கிவிடும்.

'சோணுசலம்' என்ற பெற்ருேர்கள் இட்ட பெயருக்குத்தான் அதிருஷ்டமில்லையென்ருல், 'மெதுவடை' என்று உபாத்தியாயர் வைத்த புனை பெயருக்குக் கூடவா அதிர்ஷ்டம் இல்லாமல் போகவேண்டும்? தன்னுடைய புனைபெயரை நினைக்கும்போது அவனுக்குப் பள்ளி நினைவு வந்தது. அவனுடைய கணக்கு வாத்தியார் வரதாச்சாரியார் வைத்த செல்லமான பெயர்தான் அது.

''சோணு! எழுந்து நான் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்!'' என்று தன் அருகில் நெருங்கிவரும் வாத்தியாரைக் கண்டதும் 'சடக்' கென்று இரண்டு விரலை வாயிலே விட்டு இழுத்து, நிஜார் பைக்குள்ளே நுழைத்துக்கொண்டு, நிமிர்ந்து நின்று, ''என்ன ஸார்?'' என்ருன்.

அருகிலே வந்த கணக்கு வாத்தியார், ''ஏண்டா! சாம்பிராணி, என்னடா எப்போ பார்த்தாலும் வாய் அசைப்பு? எடுடா கையை!'' என்று அவனுடைய நிஜார்ப் பைக்குள் தன் கையை விட்டு எடுத்தார். கையில்: ஊசிப் போன 'மெது வடை'. அதிலிருந்து அவர் அவனை அந்தப் பெயரிட்டுத்தான் அழைப்பது வழக்கம்.

'ஊம்..ம்..' என்ற ஒரு பெருமூச்சு எழுந்தது. 'மெதுவடை!' என்ற பெயர் எப்படி வந்தது?' என்று பல 'வெங்காய' வாசகர்கள் கேட்க, இளமை அநுபவத்தைப் பற்றி ஒரு பக்கம் வரிந்து தள்ளி வாசகர்களை மகிழ்விக்கத்தான் கனவு கண்டான் அவன்.

அது மட்டுமா? 'மேடை ஏறி நாவல் பரிசு வாங்கும்போதுகூட உபாத்தியாயரின் பொன்மொழிகளை, விவரித்துக் கூடியிருப்போரை நகைக்கச் செய்து, பேச்சாளன் என்ற பெயரையும் சூட்டிக்கொண்டு ஆனந்த மடையப்போகும் நாள் எந்நாளோ?' என்று தவித்தது அவன் மனம். ஆனுல் அவன் எழுதிய கதைகள் ஒன்றையாவது 'வெங்காய' மாகட்டும். 'பஜ்ஜி'யாகட்டும் பிரசுரித்தால் குறைந்தா போய்விடும்? பரீட்சையைக் கெடுத்துக்கொண்டு அவன் எழுதித்தான் என்ன பலன்?

உலகத்தில் நியாயத்துக்கு இடமே இல்லை. உழைப்புக்குப் பலனே இல்லை. எழுதியது அவ்வளவும் வீண்!

'ஊம்..ம்..ம்..' மற்ருெரு பெருமூச்சு.

இரவு சென்றுகொண்டேயிருந்தது. எதிரில் இருந்த 'பெட்ரூம்' விளக்கும் அணைந்தது. நோக்கும் திசையெல்லாம் கனத்த கருந்திரை போட்டிருப்பது போல இருட்டு கப்பியிருந்தது. 'டங்' கென்ற கடிகாரத்தின் மணியோசையோடு சேர்ந்து பயங்கரமாகக் கதவே இடிந்து விழும்படி தட்டும் ஓசை கேட்டது. திடுக்கிட்டு அவன் அரைக் கண்ணைத் திறந்து பார்த்தான்.

எங்கேயோ ஓரிடத்தில் யாரோ நடப்பதற்கு அறிகுறியாகக் காலடி ஓசை. அவனுக்கு இப்பொழுது அதிகப் பயமாகி விட்டது. கதவுகள் தாமாகத் திறந்து, தாமாக மூடிக் கொண்டன.

அவனுடைய இருதயம் நின்றே விட்டது. எரிந்துகொண் டிருக்கும் நெருப்புக்குச்சி யொன்று அவனை

நெருங்கி வந்துகொண் டிருந்தது. அந்த வெளிச்சத்தைத் தவிர வேறு எந்த உருவத்தையும் அவனுல் பார்க்கவே முடியவில்லை:

'பேய்! பிசாசு!

அவன் பற்கள் தந்தியடித்தன. "அ..அ..அ.." என்றுன்.

சற்றுப் பொறுத்து ஒரு கை அவன் தாடை, மோவாய்க்கட்டை எல்லாம் தடவி வாயை அடைந்து இறுகப் பொத்தியது. அது அவனை மெல்ல இழுத்துச் செல்வது போல இருந்தது. அவன் உடலின் ஒவ்வோர் அங்கமும் ஆடிவிட்டன. மூச்சுப் பேச்சில்லை. முழுக் கண்ணையும் திறந்து எதிரே பார்த்தான். அவன் தான் ஒரு பாழடைந்த வீட்டில் இருப்பதை உணர்ந்தான்.

கூர்ந்து நோக்கினுன். அங்கே உள்ள தரையில் ஓர் ஆள்—அவனைச் சுற்றி ஒரே ரத்தவெள்ளம்—அருகிலே ஒரு பிச்சுவா! 'இது என்ன பயங்கரம்! இந்த ஆள் யார்?'

"ஐ..ஐ..ஐ.." வாய் மேலே எழும்பவில்லை. "டேய் என்னடா பார்க்கிறே? நான் உன்னைக் காரியமாகத்தான் கொண்டு வந்திருக்கிறேன். போகப் போகத் தெரியும். நான் சொல்வதைக் கேக்கல்லேன்னு—உனக்கும் இதே கதிதான்!" என்றது அந்த உருவம். பளபளக்கும் கத்தியொன்று அவன் கழுத்துக்கு நேரே பளிச்சிட்டது. அதைக் கண்ட அவன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

அடர்ந்த ரோமமும் கறுப்பு உடம்பும் நெருப்பு விழியும் இப்பொழுது அவன் கண்களுக்கு நன்ருகத் தெரிந்தன. அவன் ஒரு கொலைபாதகன்; திருடன்! பலியிடுவதற்காகத்தான் தன்னை இங்கே கொண்டுவந்திருக்கிறன் என்பதை அவன் புரிந்து கொண்டான். பிச்சுவா கழுத்தை நெருங்குவதைக் கண்டான்.

"ஐயோ!..ஐயையோ!!"

அடுத்த கணம், நாலைந்து பேர் சேர்ந்து கொண்டு 'தட தட' வென்று ஓடும் சத்தம். 'கச முச கச முச' வென்று ஒரே பேச்சுக் குரல்கள்.

"நன்ருக அகப்பட்டுக் கொண்டான்!

அவனைக் கண்ட துண்டமாக வெட்டுங்கள்'' என்ற ஒரு கடோரமான குரல், கோபத்தால் நறநற வென்று பல்லைக் கடிக்கும் சத்தத்துடன் இணைந்து வந்தது.

மறுபடியும் யாரோ நடந்து வரும் ஓசை!

* * *

அடுத்த கணம்..

நாலைந்து பேர் தட தட வென்று ஓடும் சத்தம்.

''அகப்பட்டுக் கொண்டான்.. இனிமேல் துண்டம், துண்டமாக சித்திரவதை—செய்யுங்கள்'' என்று திரும்பவும் அதே கடோரமான குரல்.

மறுபடியும் காலடிச் சத்தம். இரண்டு கைகள் அவனை வந்து தடவிவிட்டு, 'கபு'க்கென்று வாரி அணைத்தது.

''ஐ....யோ!''

அவன் கண்ணைத் திறந்து பார்த்தான்.

''பூதம்! ஐயையோ!'' இது வரையில் அவன் கண்ட பயங்கரங்களை விட பயங்கரம்! அவன் கால்கள் நடுங்கின.

கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான். எதிரே அவன் அப்பா மகாதேவன் காலதேவனைப் போல் கையில் ரிஸல்ட் பேப்பருடன் நிற்பது அவனுக்கு நன்றாகத் தெரிந்தது. எதிரே திருடனோ..பேயோ இல்லை. தான் படுத்திருக்கும் அதே படுக்கை—அதே இடம்—அப்பா ரிஸல்டுடன் எதிரே இப்போது தான் பிரசன்னமாகி எழுப்புகிறார் என்பதை உணர்ந்தான்.

எல்லாம் கனவு—கற்பனை. அடுத்த விநாடி நடக்கப்போகும் சம்பவம் அவன் மனத்தில் விசுவரூபம் எடுத்தது. ஆடு திருடிய கள்ளன் போல் விழித்தான்.

''அப்பா, என் கண்ணு, செல்லமே! பயப்படாதே! ஒன்றுமில்லை. கொஞ்சம் மோரைக் காய்ச்சி வந்து தரட்டுமா? திருடனைப் பிடிச்சுப் போலீஸிலே ஒப்படைச் சுட்டோம்டா கண்ணு—நல்ல வேளை! நீ மட்டும் முழிச்சிண்டு இருந்து திருடனைப் பார்த்ததும்

'திருடன்...பிடி...பிடி'ன்னு சத்தம் போட்டு எங்களை எழுப்பாவிட்டா ஆயிரக் கணக்கிலே அல்லவா பணம் பறி போயிருக்கும்!....அது மட்டுமா?..கொலைகூட நடந்திருக்கும்..நீ கெட்டிக்காரன்தாண்டா ராஜா! திருடனைக் கண்டதும் அசடாட்டம் வாயடைத்து இருக்காமல் சத்தம் போட்டாயே! பணம் தப்பியது—நீ கத்துவதற்கும் அவன், அப்பாவின் தலையணையருகே சாவியை எடுக்க வருவதற்கும் சரியாக இருந்தது. நல்ல வேளை பார்த்துட்டே''..என்றாள் அவனை அணைத்தபடியே அவன் தாய்.

அவன் அப்பா பேப்பரைத் தூக்கி எறிந்துவிட்டு அவரும் அவனைப் புகழ ஆரம்பித்தார்.

சோணுவுக்கு ஒரு கணம் தலை சுற்றியது. 'திருடனா?..பணமா?

"எபிடியாஸ்கோப்—ஒரு விளக்கம்"

சென்ற ஆகஸ்டில் வெளியான 'எபிடியாஸ்கோப்' என்னும் கட்டுரையைப் படித்த நேயர்களில் சிலருக்கு இரண்டொரு சந்தேகங்கள் எழுந்திருக்கின்றன. முக்கியமாக எல்லோருக்கும் கண்ணாடியைப் பொருத்துவது எப்படி என்பதிலும் எந்த மாதிரியான லென்ஸ் உபயோகிப்பது என்பதிலுந்தான் சந்தேகம். எனவே 'எபிடியாஸ்கோப்'பின் தத்துவம் கீழே காட்டப்பட்டுள்ளது.

கண்ணாடி திரையிடப்படும் படத்தைப் பிரதிபலித்து அனுப்ப வேண்டியிருப்பதால் அது படத்தையும் லென்ஸையும் நோக்கியவாறு, படத்தில் காட்டியிருப்பது போல் இருக்கவேண்டும்.

படத்தின் மேல் விழும் வெளிச்சம் எல்லாவற்றையும் உபயோகிக்க முயற்சிகள் எடுக்கவேண்டும். உபயோகிக்கப்படும் லென்ஸ் 'இருபுறக் குவி லென்ஸ்' (Double Convex lens). இது சக்தி வாய்ந்ததாக இருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. கை ரேகை பார்ப்பவர்கள் உபயோகிக்கும் லென்ஸ் நல்ல பலன்களைக் கொடுக்கிறது. —மூர்த்தி.

அப்போ தான் கண்டது அனைத்தும் உண்மையா? அப்படியானால் பாழடைந்த வீடு? அங்கே இருந்த பிணம்..?'

'இது என்ன கூத்து? எல்லாம் ஆச்சரியம்..'

அவனுடைய கற்பனைத்திறன் முழுவதும் அவன் உதவிக்கு வந்துவிட்டது என்பதை அவன் பிறகுதான் உணர்ந்தான்.

இரவே 'ரிஸல்ட் வந்தது!' என்ற தலைப்பைப் போட்டு நடக்கப் போகும் நிகழ்ச்சிகளை எழுதி கடைசி முறையாகப் 'போண்டா'வுக்கு அனுப்ப நினைத்து அவன் உட்காரும்போதுதான் அவன் நண்பன் 'தோத்து' செய்த உபதேசம் ஞாபகத்துக்கு வந்தது. கதைகள் பிரசுரமாகவில்லையே என்று வருந்திய சோணுவுக்கு அது ஆறுதலைக் கொடுத்தது.

''டேய்! உப்புச் சப்பில்லாமல் கதை எழுதாதே! நீ எழுதுவதில் உயிரே இல்லை—உள்ளத்தைத் தொட்டு உலுக்கவில்லை—பழங்காலப் பாட்டிக் கதைகளை எழுதினால் 'வெங்காய'மென்ன, 'பூண்டு' கூடப் பிரசுரிக்காது!

''ஒரு வீரன்—ஒரு போர்க்களம் அலறல்—துப்பாக்கிச் சத்தம்—பேய்—' எல்லாம் வர வேண்டும். படிப்போர் மனத்திலே பீதி கலந்த உணர்ச்சி பொங்கவேண்டும்! அது வல்லவோ கதை!'' என்றான். அவன் சொன்ன யோசனைப்படியே எழுத எண்ணி இரவு கற்பனையில் ஆழ்ந்தபோதுதான் மேற்கண்ட பயங்கரம் அவன் கற்பனையில் ஓடியது. அதிலே அவனே பீதியடைந்து 'திருடன்' என்று கத்தியிருக்க வேண்டும். அந்தச் சமயம் பார்த்து நிஜமாகவே திருடன் அவன் அப்பாவை நெருங்கவே எல்லோரும் சத்தம் கேட்டு எழுந்து, அவனைப் பிடித்துவிட்டார்கள். எல்லாம் விந்தை! அவன் தன் கற்பனையின் சக்தியை உணர்ந்துவிட்டான். 'ரிஸல்ட் வந்த' பயங்கரத்திலிருந்து அவன் தப்பிவிட்டான்.

கதையே பிரசுரிக்கப் பட்டாலும் அடையாத மகிழ்ச்சியை அவன் அடைந்தான்.

சங்கிலி மறைந்த மாயம்

'நித்திலன்'

எப்படியாவது எதையாவது துப்பறிந்து 'டிடெக்டிவ்' என்று பெயர் வாங்கவேண்டும் என்று பாபுவுக்குக் கொள்ளை ஆசை. ஆனால் அவனுக்குத் துப்பறிவதற்குச் சந்தர்ப்பமே வாய்க்கவில்லை. இதற்கு என்ன செய்வது என்ற சிந்தனையுடன் நாற்காலியில் அமர்ந்திருந்தான்.

அப்போது வேலைக்கார வேணு டம்ளரில் காபியை நிரப்பிக் கொண்டு வந்து பாபுவின் எதிரிலிருந்த மேஜைமீது 'டங்'கென்று வைத்தான். அதிலிருந்து இரு துளி காபி பாபுவின் சட்டையில் தெறித்தது.

பாபு வேணுவை முறைத்துப் பார்த்துவிட்டு, பக்கத்து நாற்காலியில் துப்பறியும் நாவல் படித்துக் கொண்டிருந்த பானுவை நோக்கினன். வேணு உள்ளே சென்றுவிட்டான்.

''இதோ பார், பாபு! வர வர வேணுவின் அட்டகாசம் பொறுக்க முடியவில்லை. பேனவைக் காணவில்லையென்று தேடிக்கொண்டிருந்தோமே, அதே பேன வேணுவின் உறவுக்காரப் பையன் ஒருவனிடம் நேற்றுப் பார்த்தேன். 'உனக்கு ஏதடா, இந்தப் பேன?' என்று கேட்டதற்கு 'வேணு மாமா கொடுத்தார்' என்று சொன்னன். அம்மாவிடம் இதைப் பற்றிச் சொன்னதற்கு 'போடி, உனக்கென்ன வேலை? ரொம்ப நாட்களாக நம் வீட்டில் வேலை பார்க்கும் நன்றியுள்ள வேலைக்காரன் அவன்' என்கிருள்'' என்று பிரசங்கமே செய்துவிட்டாள் பானு.

''அவன் திருடும்போது நம் கண்களுக்கு அகப்படவேயில்லை. அகப்பட்டால், அவன் திருடன் என்று சொல்லி வீட்டைவிட்டு விரட்டிவிடலாம். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது'' என்று தொடங்கினன் பாபு.



''பானு, உன் தங்கச் சங்கிலியைக் கொடு, மேஜை மீது வைத்துவிட்டுப் பக்கத்தில் மறைந்துகொள்வோம். காலி காபி டம்ளரை எடுப்பதற்கு வரும் வேணு சங்கிலியையும் எடுத்துக் கொள்வான். பிறகு நம் துப்பறியும் திறமை எங்கே போயிற்று? திமிர்பிடித்த அந்த வேணுதான் திருடிவிட்டானென்று நிருபித்து அவனை வேலையிலிருந்து விலக்கிவிடலாம்'' என்று தன் திட்டத்தை எடுத்துச் சொன்னன். பானுவும் பாபுவின் திட்டத்திற்கு ஒப்புக்கொண்டு தங்கச் சங்கிலியைக் கழற்றிப் பாபுவிடம் கொடுத்தாள்.

சங்கிலியை மேஜைமீது டம்ளரின் பக்கத்தில் வைத்துவிட்டுப் பக்கத்து அறையில் மறைந்து கொண்டனர் பாபுவும் பானுவும்.

யாரோ ஒருவர் மேஜை அருகில் வந்துபோன காலடி ஓசை கேட்டது. மெல்ல எழுந்து மேசையண்டை சென்ருன். மேஜைமீது—

சங்கிலியையும் காணேம், டம்ளரையும் காணேம்! மேஜையின் பக்கமாகத் தண்ணீரில் நனைந்திருந்த யாருடைய பாதத்தின் அடையாளமோ காணப்பட்டது. அது இன்னமும் காயாமல் அப்படியே இருந்தது.

பாபு பானுவிடம் சொன்னன், ''டம்ளரை எடுக்க வந்த வேணுவின் நனைந்த பாதத்தின் அடையாளம் அப்படியே இங்கே தெரிகிறது. இப்போது ஒவ்வொருவருடைய பாதத்தையும் இதோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.''

ஒப்பிட்டுப் பார்த்ததில் பாபு



வின் அம்மாவின் அடிச்சுவடுகள் தான் அவை என்று தெரிய வந்தது.

'மேஜைமீது சங்கிலி கிடந்திருக்கும். அதை எடுத்துப் பத்திரப் படுத்தியிருப்பாள் அம்மா' என்று எண்ணிய பாபு, பானுவின் பக்கம் திரும்பி, ''நமது குறி தப்பி விட்டது! இருந்தாலும் சங்கிலியை எடுத்தது அம்மாதான் என்று பாத அடையாளத்தைக்கொண்டு துப்பறிந்து கண்டு பிடித்துவிட்டேனல்லவா?'' என்றான்.

பாபு அம்மாவிடம் சங்கிலியைக் கேட்டபோது அவள் திடுக்கிட்டு, ''என்னடா உளறுகிறாய்? எங்கே பானுவின் சங்கிலி? அதை என்ன செய்தாய்? உண்மையைச் சொல்!'' என்று கோபத்தால் கடுகடுத்தாள்.

பானு, தன் சங்கிலி உண்மையிலேயே எங்கோ மறைந்துவிட்டது என்று நடு நடுங்கிப் போய் அம்மாவிடம் நடந்தது எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள்.

அதைக் கேட்ட அம்மா, ''அடப் பாவி; உண்மையாக நடக்கும் வேலைக்காரனிடமா சந்தேகப்பட்டீர்கள்? நான் மேஜையின் மேலிருந்து சங்கிலியை எடுக்கவில்லை. கிணற்றில் கால் கழுவிவிட்டு மேஜையண்டை வந்தேன். மேஜைமீது இருந்த காலி டம்ளரை மட்டுந்தான் எடுத்துக்கொண்டு போனேன். மரியாதையாகச் சங்கிலியைக் கொடுத்துவிட்டு மறு வேலை பார்'' என்று சத்தம் போடும்போதுதானா பாபுவின் அப்பா வர வேண்டும்?

அவர் விஷயத்தைப் புரிந்துகொண்டதும் பாபுவை நையப் புடைத்துவிட்டார். அவன் சாப்பிடக்கூட இல்லாமல் படுக்கையில் படுத்துவிட்டான்.

நடு நிசி பன்னிரண்டு மணியிருக்கலாம். எல்லாரும் உறங்கிக் கொண்டிருந்தனர். 'இந்த வீட்டில் இனி ஒரு நிமிஷமேனும் இருக்கக் கூடாது. எங்கேயாவது ஓடிவிட வேண்டும்' என்ற முடிவுடன் தோட்டத்துக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான் பாபு.

அங்கே விளக்கு வெளிச்சத்தில் பானுவின் சங்கிலியோடு விளையாடிக்கொண் டிருந்தது அவனுடைய அருமைப் பூனை 'புஸ்ஸி!'

பாபுவுக்கு இப்போது விஷயம் தெளிவாகப் புரிந்துவிட்டது. சங்கிலியைப் பூனைதான் முதலில் கவ்விக்கொண்டு சென்றிருக்க வேண்டும். பிறகுதான் நனைந்த கால்களுடன் பாபுவின் அம்மா வந்து டம்ளரை மட்டும் எடுத்துச் சென்றிருக்கிறாள்.

இதை எண்ணி எண்ணி மனம் நொந்தவாறே சங்கிலியை எடுத்துக்கொண்டு ஓசைப்படாமல் வீட்டிற்குள் சென்று தன் படுக்கையறையில் நுழைந்தான். ஆனால் அதே சமயம் அப்பாவின் அறையின் உள்ளே ஏதோ ஓசை கேட்பதை அறிந்து அறையினுள்ளே எட்டிப் பார்த்துத் திடுக்கிட்டான், திகைத்தான்!

அறையின் உள்ளே வேலைக்காரன் வேணு நகைப் பெட்டியைத் திறந்து நகைகளைத் திருடிக் கொண்டிருந்தான்!

உடனே பாபு அறைக் கதவைத் தாளிட்டு, பெற்றோர்களை எழுப்பினான்; பிறகு என்ன?

வேணு நல்லவனென்று நம்பிக் கொண்டிருந்த பானுவின் அம்மா விஷயம் புரிந்துகொண்ட பிறகு, வேலைக்காரன் வெளியேற்றப் பட்டான்.

''டிடெக்டிவ் அண்ணா பாபுவுக்கு..'' என்று கோஷமிட்ட பானுவின் குரலுக்கு 'ஜே' போட ஆள் இல்லாததால் பூனை 'புஸ்ஸி' 'மியாவ் மியாவ்' என்று குரல் கொடுத்தது!

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

R. 10. டி. எஸ். ரகுராமன், பம்பாய் - 40; 11. கு. ப- சுவாமி, குட்டிப்பாளையம்; 12. என். ரவிநாராயணன், சென்னை - 4; 13. ஆர். ராஜேந்திரன், சேலம் - 2: 14. வி. ராமகிருஷ்ணன், திருக்கோயிலூர், 15. கே. என். வி. ராம், செங்கோட்டை; 16. ஆ. ராஜகோபால், மதுக்கரை; 17. மா. ராஜேந்திரன், விக்கிரமசிங்கபுரம்; 18. க. ரங்கராஜன், வேலூர். வ. ஆ; 19. கே. ராமகிருஷ்ணன், சென்னை - 4; 20. எம். ராமகிருஷ்ண மித்திரா, மதுரை; 21. எஸ். ராஜேந்திரன், மங்கைநல்லூர்; 22. எஸ். கே. ராஜவேலு, எடப்பாடி; 23. எம். ஜே. ராமன், மணக்கால்; 24. எம். ரகுநாதன், சென்னை - 5; 25. ஆர். ராமதாஸ், சாத்தூர். 26. எம். ரவி, சென்னை - 4: 27. டி. ஏ. ராமன், அந்தியூர்; 28. கே. ராமசந்திரன், குமாரலிங்கம்.

S. 1. மு. சுந்தரராஜன், ஈரோடு; 2. டி. எம். சுதர்சனம், சென்னை - 1; 3. பி. சுப்பிரமணியன், கோபிசெட்டி பாளையம்; 4. எம். ஸ்ரீதரன், சென்னை - 4; 5. ஆர். எஸ். சுகுணு, பெரணமல்லூர்: 6. எஸ். சிவஞான சுந்தரம், பெரிய குளம்: 7. த. சீனிவாசன், பூண்டி; 8. அ. சச்சிதானந்தம், முத்தூர்; 9. பி. என். சங்கர நாராயணன், பொள்ளாச்சி; 10. ஆர். ஆர். சாந்தமூர்த்தி, ஈரோடு, 11. அ. சிவ சுப்பிரமணியன், அம்மையப்பன்; 12. எஸ். சுவேதசாமிதாஸ், நல்லூர்; 13. வி. ஆர். சுந்தரராஜன், புனு- 2; 13. ஏ. சிவஷண்முகம், திருப்பாதிரிப்புலியூர். 15. ஆர். சண்முகக் கனி, திருப்பத்தூர்; 16. சத்ய சங்கர், பட்டுக்கோட்டை; 17. வி. சுந்தர், சென்னை - 20; 18. பி. வி. சுப்பிரமணியன், சென்னை - 28; 19. க. அ. சீனிவாசன், சென்னை - 24: 20. கு. சுப்பிரமணியன், மதுரை; 21. க. வே. சண்முகசுந்தரம், கறுங்கல் பாளையம்; 22. கே. சண்முக சுந்தரம், ஈரோடு; 23, ஆ. சுப்பிரமணியம், ஒரத்தநாடு: 24. ஷேக் அல்லாவுதீன், குடவாசல்; 25. எஸ். சம்பத் குமார், மணச்ச நல்லூர்; 26. ஆர். சயாராம். பாண்டிச்சேரி; 27. ஆர். சீனிவாசன், அக்கியம்பட்டி; 28. வி. சேகர், பர்ஹாம்பூர்; 29. என். எச். எஸ். சுல்தான், நடார்; 30. அரு. சண்முகம், தேவகோட்டை; 31. ஜி சுவாமிநாதன், தென்கச்சி பெருமாள் நத்தம்; 32. ஆர். சாந்தா. கோயம்புத்தூர்.

K. 1. கே. வெங்கடேசன். கோனேரி ராஜபுரம்; 2. கே. வசந்த குமாரி, திருச்சிராப்பள்ளி - 1; 3. ம. வேங்கட ரமணி, புனு-2; 4. எஸ். வரதராஜன், பெங்களூர் ஸிடி; 5. எஸ். விசுவநாதன், சென்னை - 17; 6. எஸ். வேங்கட ரமணி, அருவங்காடு; 7. கே. எஸ். வெங்கடேசுவரன், கல்யாண்; 8. ஈ. வி. வைத்தியநாதன், லால்குடி; 9. டி. ஜி. வேங்கடாசலபதி, திருவாளப்புத்தூர்; 10. மு. அ. வருசை இப்ராகீம், செய்துங்கநல்லூர்; 11. டி. வேலுசாமி, திருப்பூர்; 12. வி. டி. வேதபுரி. கிருஷ்ணுபுரம்; 13. கே. எஸ். வைதீசுவரன், பாபநாயக்கன் பாளையம்; 14. டி. வேலாயுதம், ஆம்பூர்; 15. ப. விருத்தாம்பாள், ஒரத்தநாடு; 16. வி. ஸி. வாசுதேவன், சென்னை - 1;

(Regd as a Newspaper in Ceylon) Regd. No. M 5547

கண்ணன்

விடுமுறைக் கால போட்டிகள்

இதோ ஒரு புதிய போட்டி: இதில் ஐந்து வயது முதல் பதினாறு வயது அடைந்தவர்கள் வரையில் கலந்துகொள்ளலாம்: கதை, கட்டுரை, கவிதை, சித்திரம் என்று நாலு வகையாக இந்தப் போட்டியைப் பிரித்திருக்கிறோம்: ஒவ்வொரு வகைக்கும் முதல் பரி இரண்டாம் பரிசு என்று உண்டு. வயதுவாரியாகப் பிரித் இந்தப் பரிசுகளைத் தர எண்ணியுள்ளோம்: 5 வயது முத 8 வயது வரையில் ஒரு பிரிவு; 9 வயது முதல் 12 வயது வ யில் ஒரு பிரிவு; 13 வயது முதல் 16 வயது வரையில் ஒரு பிரிவு, இதன்படி, கதைப் போட்டி என்றால் வயதுக் கிரமமாக மூன்று முதற் பரிசுகள் பெறலாம். அப்படியே கவிதை, கட்டுரை சித்திரம் ஆகிய போட்டிகளுக்கும் தனித்தனியே மூன்று முதல் பரிசுகள் உண்டு. உங்களுக்கு எதில் திறமையிருக்கிறதோ அந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம். எல்லாவற்றிலும் திறமையிருந்தால் எல்லாவற்றிலும் கலந்துகொள்ளலாம்.

முக்கிய நிபந்தனைகள்:

1. இந்தப் போட்டியில் கண்ணன் கழக அங்கத்தினர்களே கலந்துகொள்ளலாம். போட்டியில் சேருபவர்கள் இந்த ஆண்டு மே, ஜூன் மாத இதழ்களில் வெளியாகியுள்ள மூன்று கூப்பன்களைப் பூர்த்தி செய்து அனுப்பவேண்டும். கண்ணனில் இந்த அங்கத்தினர் கூப்பன் வெளியாகும்.

2. ஒரே பக்கத்தில் தெளிவாக இடம் விட்டு, மசியால் எழுத வேண்டும்: உறைகளின் மேலே கண்ணன் கதைப் போட்டி அல்லது கவிதைப் போட்டி அல்லது சித்திரப் போட்டி அல்லது கட்டுரைப் போட்டி என்று எந்த வகைப் போட்டியில் கலந்துகொள்கிறீர்களோ அதைக் குறிப்பிடவேண்டும்.

3. உங்கள் அங்கத்தினர் எண், வயது, வீட்டு முகவரி முதலியவற்றைக் கூப்பனில் எழுதுவதோடு, நீங்கள் எழுதும் பக்கத்தின் தலைப்பிலும் குறிப்பிடவேண்டும்.

4. நீங்கள் எழுதுவது உங்களுடைய சொந்தக் கற்பனையாக இருக்கவேண்டும்.

5. மற்ற நிபந்தனைகள் வழக்கம்போலத்தான். இந்தப் போட்டிகளின் முடிவுத் தேதி 31-7-'58.

கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4.